தினபூமி
thinaboomi.com
பூமி: 33 சுற்று: 247 ஆனி 32
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, புதன், ஜூலை 16, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**பறக்கும் விமானத்தில் திருமணம் செய்த ஜோடி: வலைதளங்களில் வீடியோ வைரல்**
...2-ம் பக்கம்

**சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு: இருதரப்பு உறவு குறித்து விளக்கம்**
...3-ம் பக்கம்

**4-வது டெஸ்ட் போட்டியில் பும்ரா, ரிஷப் பண்ட் விலகல்? கேப்டன் சுப்மன் கில் பதில்**
...6-ம் பக்கம்






கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் நேற்று தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் மற்றும் திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு விவரங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வி.கணேசன், மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களில் விண்ணப்பிப்பவர்களுக்கு

# மகளிர் உரிமைத்தொகை நிச்சயமாக கிடைக்கும்

## சிதம்பரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

கடலூர், ஜூலை 15-

**தமிழகம் ஓரணியில் இருக்கும் போது டெல்லி அணியின் எந்த காவி திட்டமும் இங்கே பலிக்காது என சிதம்பரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். மேலும், உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் விண்ணப்பிப்பவர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை நிச்சயமாக கிடைக்கும் என்றும் அவர் தெரவித்தார்.**

**3,563 இடங்களில்...**

'உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தை, கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் உள்ள வாண்டையார் திருமண மண்டபத்தில், நேற்று முதல்வர் துவக்கி வைத்தார். முதல்கட்டமாக, 3,563 இடங்களில் முகாம்கள் நடைபெறுகின்றன. மக்களிடம் மனுக்களை முதல்வர் ஸ்டாலின் பெற்றுக் கொண்டார். உங்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்படும் மனுக்களுக்கு, 45 நாட்களில் தீர்வு காணப்படும். ரேஷன் கார்டு, ஆதார் கார்டு பெயர் மாற்றம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு, அன்றைய தினமே தீர்வு காணப்படும். நேற்று துவங்கி நவம்பர் மாதம் வரை, 10,000 முகாம்கள் நடைபெற உள்ளன.

**பிரத்யேக இணையதளம்**

நகரப்பகுதிகளில் 3,768, ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இன்று துவங்கி ஆகஸ்ட் 15 வரை, முதற்கட்டமாக 3,563 முகாம்கள் நடத்தப்பட உள்ளன. நகர்ப்புறங்களில் 1,428 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 2,135 முகாம்களும் நடக்க உள்ளன. 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ், மாவட்டங்களில் முகாம் நடைபெற உள்ள இடத்தின் விவரங்களை அறிய பிரத்யேக இணையதளத்தை தமிழக அரசு தொடங்கி உள்ளது.

**மனுக்களுக்கு தீர்வு....**

பின்னர் சிதம்பரத்தில் இளையபெருமாள் நூற்றாண்டு அரங்கம் திறப்பு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: காமராஜர் பிறந்தநாளில் மாபெரும் முன்னெடுப்பாக உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளேன். உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டம் காரணமாக அரசு மேல் நம்பிக்கை வைத்து இன்னும் பலர் கோரிக்கை மனுக்களை வழங்கினர். மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் 5,000 முகாம்கள் நடத்தி பல லட்சம் மனுக்களுக்கு தீர்வு கண்டோம். தகுதி இருந்தும் ரூ.1000 உரிமைத் தொகை கிடைக்காதவர்கள், முகாமில் விண்ணப்பம் கொடுத்தால் போதும் நிச்சயம் உரிமைத் தொகை கிடைக்கும். மக்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று அரசின் சேவையை வழங்குவது தான் திட்டத்தின் நோக்கம்.

**நேரம்தான் இல்லை....**

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் விண்ணப்பிக்கும் மகளிருக்கு, நிச்சயம் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும். லிஸ்ட் பெருசா இருக்கு. சொல்ல நேரம்தான் இல்லை. ஆனால் நெஞ்சை நிமிர்த்தி சொல்கிறேன். தமிழகம் வரலாற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து இருக்கிறோம். இந்த திட்டங்கள் மட்டும் போதுமா என்றால் கேட்டால் போதாது.

**ஓரணியில் தமிழ்நாடு...**

திராவிட மாடல் அரசுக்கு துணையாக கூட்டணி கட்சியின் தலைவர்கள் உள்ளனர். மார்க்ஸிய, அம்பேத்கர் இயக்க தலைவர்கள் ஒற்றுமையாக இருப்பதுதான் ஓரணியில் தமிழ்நாடு. தமிழ்நாடு ஓரணியில் இங்கு இருக்கும்போது எந்த டெல்லி அணியின் காவித் திட்டமும் பலிக்காது. ஆதி திராவிட, பழங்குடியின மக்களுக்கு அதிக திட்டங்களை தந்தது தி.மு.க. அரசு. அரசின் சமூக சீர்திருத்த திட்டங்களுக்கு கூட்டணி கட்சிகள் துணையாக இருக்கின்றன. தமிழ்நாடு வரலாற்றிலேயே பட்டியலின மக்களுக்கு அதிக திட்டங்கள் வழங்கியுள்ளோம். சமூக நீதி பயணம் நீண்ட நெடியது. அதற்கு காலம் தேவைப்படும். எல்லாம் மாறும்.. மாற்றுவேன். இவ்வாறு அவர் பேசினார்.

> **மார்க்ஸிய, அம்பேத்கர் இயக்க தலைவர்கள் ஒற்றுமையாக இருப்பதுதான் ஓரணியில் தமிழ்நாடு. தமிழ்நாடு ஓரணியில் இங்கு இருக்கும்போது எந்த டெல்லி அணியின் காவித் திட்டமும் பலிக்காது.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

### `உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை

# சிதம்பரத்தில் துவக்கி வைத்தார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்

கடலூர், ஜூலை 16-

**பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசு வழங்கும் சேவைகள் எளிமையாக கிடைத்திடும் வகையில், அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை, கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் (ஜூலை 14) இரவு சென்னையில் இருந்து ரயில் மூலம் சிதம்பரம் வந்து தனியார் ஹோட்டலில் தங்கினார். இவருக்கு தி.மு.க. சார்பில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று (ஜூலை 15) காலை 9.30 மணிக்கு சிதம்பரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் முதல்வர் காமராஜர் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசு வழங்கும் சேவைகள் எளிமையாக கிடைத்திடும் வகையில், அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்ற புதிய திட்டத்தினை சிதம்பரத்தில் உள்ள தனியார் திருமண மண்டப வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தில் கீழ் தமிழ்நாடு முழுவதும் நகர்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும், கடலூர் மாவட்டத்தில் நகர்புறப் பகுதிகளில் 130 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 248 முகாம்களும் நடத்தப்பட உள்ளது.

முகாம் நடைபெறும் பகுதிகளில் 2 நாட்களுக்கு முன்பாக தன்னார்வலர்கள் மூலம் பொதுமக்களின் வீடு வீடாக சென்று முகாம் குறித்த விவரங்களை தெரியப்படுத்துவதோடு, விண்ணப்பங்களும் வழங்கப்பட உள்ளன.

மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் முகாம் நடைபெறும் நாளன்று முகாமுக்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தை அளிக்கலாம்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கான விண்ணப்பம் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களில் மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சிதம்பரம் பேட்டை பகுதியில் அம்பேத்கர் சிலையை திறந்து வைத்தார். தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே வாழ்ந்து தனது வாழ்வையே அர்ப்பணித்தவரான எல்.இளையபெருமாள் திருவுருவச் சிலையுடன் ரூ.6.39 கோடி மதிப்பீட்டில் கட்டிப் பட்டுள்ள நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.

அமைச்சர்கள் கே.என் நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சாமிநாதன், திருமாவளவன் எம்.பி, விஷ்ணு பிரசாத் எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் கடலூர் ஐயப்பன், நெய்வேலி சபா ராஜேந்திரன், வேல்முருகன், காட்டுமன்னார்கோயில் விடுதலைச் செல்வன் செல்வன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, மாவட்ட ஆட்சியர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### சார்-பதிவாளர் உள்ளிட்ட 645 காலி பணியிடங்களுக்கான

# டி.என்.பி.எஸ்.சி. குரூப் 2, குரூப் 2-ஏ தேர்வுக்கான அறிவிப்பு வெளியீடு

சென்னை, ஜூலை 16-

**சார்-பதிவாளர், உதவி தொழிலாளர் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவியாளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் 645 காலியிடங்களை நிரப்பும் வகையில் ஒருங்கிணைந்த குரூப் 2 மற்றும் குரூப் 2(ஏ) தேர்வுக்கான அறிவிப்பை டி.என்.பி.எஸ்.சி. வெளியிட்டது. குரூப் 2 (ஏ)-வுக்கான தேர்வு முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக டி.என்.பி.எஸ்.சி. செயலாளர் எஸ்.கோபால சுந்தரராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு: ‘டி.என்.பி.எஸ்.சி. வருடாந்திர தேர்வு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, “சார்-பதிவாளர், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர், வனவர், முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவியாளர் உள்பட பல்வேறு பதவிகளில் 645 காலியிடங்களை நிரப்பும் வகையில் ஒருங்கிணைந்த குரூப்-2 மற்றும் குரூப்-2(ஏ) தேர்வுக்கான அறிவிப்பு ஜூலை 15-ம் தேதி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான முதல்நிலைத் தேர்வு செப்டம்பர் 28-ம் தேதி நடைபெறும். தேர்வுக்கு ஆகஸ்ட் 13-ம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். தேர்வுக் கட்டணத்தை யுபிஐ வசதி மூலமாக செலுத்தலாம். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானது ஆகும்.

அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிடம் இருந்து கூடுதல் காலிப் பணியிடங்கள் பெறப்படும பட்சத்தில் கலந்தாய்வுக்கு முன்பாக மேலும் பணியிடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மேலும், தேர்வர்களின் நலன் கருதி குரூப்-2 (ஏ) முதன்மைத் தேர்வு முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது” என்று கூறியுள்ளார்.

முதல்நிலைத் தேர்வை பொறுத்தவரையில் குரூப்-2, குரூப்-2 (ஏ) இரு தேர்வுகளுக்கும் பொதுவான தேர்வுதான். பொது அறிவு மற்றும் கணிதம் தொடர்பான 100 கேள்விகள், பொது தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பாடத்தில் 100 கேள்விகள் என மொத்தம் 200 கேள்விகள் இடம்பெறும். ஒரு கேள்விக்கு ஒன்றரை மதிப்பெண் வீதம் மொத்தம் 300 மதிப்பெண். இதில் வெற்றிபெறுவோர் அடுத்த கட்ட தேர்வான முதன்மைத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

முதன்மைத்தேர்வானது குரூப்-2 பணிகளுக்கும், குரூப்-2(ஏ) பணிகளுக்கும் தனித்தனியே நடத்தப்படும். குரூப்-2 பணிகளுக்கான முதன்மைத் தேர்வில், பொது அறிவு பகுதியில் 300 மதிப்பெண்களுக்கு விரிவாக விடையளிக்க வேண்டும். குரூப்-2 (ஏ) பணிகளுக்கு பொது அறிவு பகுதியில் 150 கேள்விகள், கணிதம் பகுதியில் 50 கேள்விகள் என அப்ஜெக்டிவ் முறையில் 200 கேள்விகள் இடம்பெறும். மொத்த மதிப்பெண் 300.

இது கணினி வழியில் நடத்தப்படும். முன்பு பொது அறிவு பகுதியில் பொது தமிழ் அல்லது பொது ஆங்கிலம் தொடர்பான 60 வினாக்கள் இடம்பெற்றிருந்தது. தற்போது புதிய தேர்வுமுறையில் மொழிப் பாடம் தொடர்பான அந்த பகுதி முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது. மேலும், விரிவாக பதில் எழுதக்கூடிய கட்டாய தமிழ் மொழித் தகுதித்தாள் தேர்வு குரூப்-2, குரூப் 2-(ஏ) இரு முதன்மைத் தேர்விலும் பொது தேர்வாக இடம்பெறும். இதில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் பெற வேண்டும். இந்த தேர்வில் எடுக்கும் மதிப்பெண் ரேங்க் பட்டியல் தயாரிக்க எடுத்துக் கொள்ளப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து

# வெற்றிகரமாக மீண்டும் பூமிக்கு திரும்பினார் சுபான்ஷு சுக்லா

## குடும்பத்தினர் கேக் வெட்டி கொண்டாட்டம்



புதுடெல்லி, ஜூலை 16-

**விண்வெளி நிலையத்தில் இருந்து சுபான்ஷு சுக்லா பத்திரமாக தரையிறங்கியதைக் கொண்டாடும் வகையில் அவரது குடும்பத்தினர் கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தனர்.**

ஆக்சியம்-4 திட்டத்தின் கீழ் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு செல்ல இந்தியாவின் சுபான்ஷு சுக்லா, அமெரிக்காவை சேர்ந்த பெக்கி விட்சன், ஹங்கேரியை சேர்ந்த திபோர் கபு, போலந்தை சேர்ந்த ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி ஆகியோர் தேர்ந்து எடுக்கப்பட்டனர். அவர்கள் 4 பேரும் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தின் ஏவுதள வளாகத்தில் இருந்து ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம் பொருத்தப்பட்ட, பால்கன்-9 ராக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கடந்த மாதம் 25-ந்தேதி புறப்பட்டனர்.

விண்ணில் ஏவப்பட்ட பால்கன்-9 ராக்கெட்டில் இருந்து வெற்றிகரமாக பிரிந்த டிராகன் விண்கலம், தொடர்ந்து 28 மணி நேரம் பயணித்து 26-ந்தேதி மாலை சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்தது. அதன் பிறகு அதனுடன் வெற்றிகரமாக இணைக்கப்பட்ட டிராகன் விண்கலத்தில் இருந்த சுபான்ஷு சுக்லா உள்பட 4 பேரும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குள் சென்றனர்.

அங்கு அவர்கள் 18 நாட்கள் தங்கி இருந்து 60 ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டனர். அவற்றில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) 7 சோதனைகள் அடங்கும். இந்தநிலையில், சுபான்ஷு சுக்லா உள்பட 4 பேரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் மூலம் நேற்று முன்தினம் மாலை 4.45 மணிக்கு பூமிக்கு புறப்பட்டனர். விண்வெளி நிலையத்தில் இருந்து புறப்பட்ட டிராகன் விண்கலம், சுமார் 22 மணி நேரத்திற்கு பிறகு நேற்று மதியம் 2.55 மணிக்கு வளிமண்டல பகுதிக்குள் நுழைந்தது. இதனையடுத்து இந்திய நேரப்படி இன்று பகல் 3.01 மணியளவில் டிராகன் விண்கலம் பசிபிக் பெருங்கடலில் கலிபோர்னியா கடற்கரையில் பத்திரமாக தரையிறங்கியது. இதன் மூலம் சுபான்ஷு சுக்லா வரலாற்று சாதனை படைத்துள்ளார். இந்நிலையில், விண்வெளி நிலையத்தில் இருந்து சுபான்ஷு சுக்லா பத்திரமாக தரையிறங்கியதைக் கொண்டாடும் வகையில் அவரது குடும்பத்தினர் கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தனர். இஸ்ரோவை சேர்ந்தவர்களும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

### 100 கோடி மக்களுக்கு முன்மாதிரி:

# சுபான்ஷு சுக்லாவை வரவேற்று பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சி

புதுடில்லி, ஜூலை 15-

**விண்வெளி பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்கு திரும்பிய இந்திய விமானப் படை குரூப் கேப்டன் சுக்லாவை, நாட்டு மக்களுடன் இணைந்து வரவேற்கிறேன் என பிரதமர் மோடி கூறியுள்ளார்.**

சுபான்ஷு சுக்லா உள்ளிட்டோர் பத்திரமாக பூமிக்கு திரும்பியதைத் தொடர்ந்து பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: விண்வெளிக்கான வரலாற்று சிறப்பு மிக்க பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்கு திரும்பும் சுபான்ஷு சுக்லாவை, நாட்டு மக்களுடன் இணைந்து வரவேற்கிறேன். சர்வதேச விண்வெளி நிலையணத்தை பார்வையிட்ட இந்தியாவின் முதல் விண்வெளி வீரராக, தன அர்ப்பணிப்பு, தைரியம் மூலம் 100 கோடி மக்களின் கனவுகளுக்கு முன்மாதிரியாக உள்ளார். இது, நமது சொந்த விண்வெளி பயணமான ககன்யானை ககன்யானை நோக்கிய மற்றொரு மைல் கல் ஆகும் எனத் தெரித்துள்ளார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 317.45 | 113.50 |
| பாயின்ட் 82,570.91 | பாயின்ட் 25,195.80 |



**தங்கம்**
1 சவரன் ₹72,160
1 கிராம் ₹9,020



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.92

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# பறக்கும் விமானத்தில் திருமணம் செய்த ஜோடி

## சமூக வலைதளங்களில் வீடியோ வைரல்

**துபாய், ஜூலை 16-**

பறக்கும் விமானத்தில் திருமணம் செய்த ஜோடிகளில் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



வீட்டைக் கட்டிப்பாரு, கல்யாணம் பண்ணிப்பாரு என்று கிராமத்தில் ஒரு பழமொழி கூறுவார்கள். ஏனென்றால் திருமணம் முடிப்பது என்பது சுலபமான காரியம் இல்லை என்பதால், இந்த பழமொழி வந்தது. திருமண நிகழ்வானது, ஜாதகப் பொருத்தத்தில் தொடங்கி, பெண் பார்த்தல், படிப்பு, அந்தஸ்து என பல்வேறு நிலைகளை கடந்து கடைசியில் திருமணம் என்ற பந்தத்தில் வந்து நிற்கும். இவ்வாறு நடத்தப்படும் திருமணங்கள் ஒரு கூட்டு விழா போன்றது. பல்வேறு ஊர்களில் இருக்கும் சொந்தங்கள் அனைத்தையும் பத்திரிகை வைத்து அழைத்து அனைவரும் ஒரு நாளில் ஒரே இடத்தில் கூடுவது என்பது பெண், மாப்பிள்ளை வீட்டாருக்கு மன மகிழ்ச்சியைத் தரும். ஒரு சிலர் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆகாயத்தில் பறந்தவாறு திருமணம் செய்து கொள்வதும் என்பது வழக்கமாகிவிட்டது. சிலர் வெகு ஆடம்பரமாக திருமணங்களை நடத்துகின்றனர்.

இந்தநிலையில், விமான ஆர்வலரும் பிரபல இன்ப்ளூயன்சருமான சாம் சூய் விமானத்தில் திருமணம் செய்து பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். போயிங் 747 விமானத்தில் நடந்த இந்த திருமணம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. வைரலான வீடியோவின் படி, திருமண உடையில் மணமக்கள் விமானம் ஏறும் இடத்திற்கு வருகின்றனர். அங்கு விரிக்கப்பட்டிருந்த சிவப்பு கம்பளத்தில் மணமக்கள் இருவரும் கைகோர்த்தபடி நடந்து வந்தனர்.

அதன் பின்னர் விமானத்தில் ஏறிய மணமக்கள் உள்ளே தங்களது விருந்தினர்களுடன் திருமணத்தை கொண்டாடினர். விமானத்தின் உட்புறத்தில் பிரம்மாண்டமாக அலங்கரிக்கப்பட்ட ஒரு ஆடம்பர நட்சத்திர ஹோட்டலாக விமானம் மாறுபட்டிருப்பதை வீடியோவில் காண முடிகிறது. விமானத்தில் நடைபெற்ற இந்த திருமணத்தில் மணமக்கள் ஒருவருக்கொருவர் மோதிரம் மாற்றிக்கொண்டு வானத்தில் தங்களது காதலை உறுதி செய்தனர்.

இதனை வீடியோவாக எடுத்து "காற்றில் காதல் உள்ளது" என்ற தலைப்புடன் பியோனா & சாம் என்ற ஜோடி சமூக வலைதளங்களில் பகிர்ந்திருந்துள்ளனர். இந்த ஜோடி ஜூலை 12 அன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள புஜைரா சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டதாக கல்ப் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# காமராஜரின் உயரிய சிந்தனைகள் நமக்கு ஊக்கமளிக்கும்: பிரதமர்

**புதுடெல்லி, ஜூலை 16-**

காமராஜருக்கு மரியாதை செலுத்துவதாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டை 9 வருடங்கள் ஆட்சி செய்த பெருந்தலைவர் காமராஜரின் 123-வது பிறந்தநாளான நேற்று கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. அரசியல் தலைவர்கள், காமராசரின் புகழை போற்றி வருகின்றனர். இந்த நிலையில், காமராசரின் பிறந்தநாளையொட்டி, பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது:

கே. காமராஜ் அவர்களின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்துகிறேன். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் இருந்த அவர், சுதந்திரத்திற்குப் பிந்தைய நமது பயணத்தின் வளர்ச்சிக்குரிய ஆண்டுகளில் விலைமதிப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கினார். அவரது உயரிய சிந்தனைகளும், சமூக நீதி குறித்த உறுதிப்பாடும் நம் அனைவருக்கும் மகத்தான ஊக்கமளிக்கும். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# ஜம்மு காஷ்மீரில் பள்ளத்தாக்கில் கவிழ்ந்த வேன்: 7 பேர் உயிரிழப்பு

**ஸ்ரீநகர், ஜூலை 16-**

ஜம்மு காஷ்மீரில் பள்ளத்தாக்கில் வேன் கவிழ்ந்த விபத்தில் 7 பேர் பலியாகினர்.

ஜம்மு காஷ்மீர் ஆல் பகுதியில் இருந்து வேன் ஒன்று அசுர வேகத்தில் சென்று கொண்டிருந்தது. தோடா நகர பகுதிக்குச் சென்ற அந்த வாகனத்தில் 20க்கும் மேற்பட்டோர் இருந்தனர். தோடா மாவட்டத்தில் பாரத்-பாக்லா சாலையில் வேன் வந்த போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. வந்த வேகத்தில் வேன் பள்ளத்தாக்கில் பாய்ந்தது. இதில் வேனில் இருந்தவர்களில் 7 பேர் உடல் நசுங்கி பலியாகினர்.

இடிபாடுகளில் சிக்கிய மற்றவர்களை அங்குள்ளோரும், மீட்புக்குழுவினரும் மீட்பு அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். மீட்கப்பட்டவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. அதிவேகமும், டிரைவரின் கவனக்குறைவும் விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று உள்ளூர் மக்கள் தெரிவித்துள்ளனர்.



முதல்வர் மு.க. ஸ்டாலின், ஐயா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் நிறுவப்பட்டுள்ள ஐயா எல்.இளையபெருமாள் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

## சிதம்பரம் தொகுதியின் சீர்திருத்த பிள்ளை:

# திருமாவளவனுக்கு முதல்வர் புகழாரம்

**சிதம்பரம், ஜூலை 16-**

சிதம்பரம் தொகுதியின் சீர்திருத்த பிள்ளையாக திருமாவளவன் திகழ்வதாக முதல்வர் புகழாரம் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் லால்புரத்தில் ஐயா எல்.இளையபெருமாள் திருவுருவ சிலையை திறந்து வைத்த பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- இளைய பெருமாளின் போராட்டம் ஆதி திராவிட மக்களின் எழுச்சிக்கு காரணமாக இருந்தது. வன்கொடுமை தடுப்பு சட்டத்திற்கு அடிப்படையே இளையபெருமாள் கமிட்டி அறிக்கை தான். சிதம்பரம் தொகுதியின் சீர்திருத்த பிள்ளையாக திகழ்கிறார் தொல்.திருமாவளவன். தி.மு.க. அரசுக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் துணையாக உள்ளனர். ஓரணியில் தமிழ்நாடு இருந்தால் எந்த டெல்லி அணியின் காவி திட்டமும் பலிக்காது.

முகாம்கள் நடைபெறும் இடங்களில் மருத்துவ முகாம்களும் நடைபெறும். கல்வி அளிப்பதன் மூலம் தீண்டாமையில் இருந்து மக்களை மீட்டெடுக்க முடியும். ஆதிதிராவிட மக்களுக்கு அதிகமான திட்டங்களை தந்தது தி.மு.க. அரசு.

சமூக விடுதலை பயணம் என்பது நீண்ட நெடிய பயணம் என்றார்.

# இந்தியாவில் கால்பதித்த டெஸ்லா: மும்பையில் முதல் ஷோரூம் திறப்பு

**மும்பை, ஜூலை 16-**

மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் மும்பையின் பாந்த்ரா குர்லா வளாகத்தில் டெஸ்லாவின் முதல் விற்பனை ஷோரூமை திறந்து வைத்தார். அவர், "டெஸ்லா சரியான மாநிலத்துக்கும், சரியான நகரத்துக்கும் வந்துவிட்டது" என்று தெரிவித்தார்.

மும்பையில் முதல் டெஸ்லா ஷோரூமை திறந்துவைத்து பேசிய தேவேந்திர பட்னாவிஸ், "டெஸ்லாவை மும்பைக்கு வரவேற்கிறேன். டெஸ்லா இங்கு தனது முதல் ஷோரூமை திறந்துள்ளது. டெஸ்லா சரியான நகரத்துக்கும், சரியான மாநிலத்துக்கும் வந்துவிட்டது. டெஸ்லா இந்தியாவில் தனது முதல் ஷோரூமை மும்பையில் தொடங்கியுள்ளது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

டெஸ்லா இங்கு உதிரிபாகங்கள் மற்றும் சேவை மையத்தையும் நிறுவ உள்ளது. மேலும், நான்கு பெரிய சார்ஜிங் நிலையங்களையும் அமைக்கவுள்ளனர். மின்சார வாகனங்கள் இயக்கத்தில் முன்னணியில் உள்ள மாநிலமான மகாராஷ்டிராவை டெஸ்லா தேர்ந்தெடுத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவில் டெஸ்லா அதன் ஒய் (Y) மாடல் வாகனங்களை அறிமுகப்படுத்துகிறது. வரும் நாட்களில் டெஸ்லா, இந்தியாவில் தனது உற்பத்தியை தொடங்க முடிவு செய்யும்போது மகாராஷ்டிரா அதற்கு விருப்பமான ஒரு இடமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று அவர் கூறினார்.

# சிரியாவில் இருதரப்பு மோதல்: 100 பேர் பலி

**சிரியா, ஜூலை 16-**

சிரியா ஸ்வீடா மாகாணத்தில் இருதரப்பினரிடேயே மோதலில் 100 பேர் உயிரிழந்துள்ளனர். அரசின் படைகள் தலையிடுவதாக தகவல் தெரிவித்தது.

சிரியாவின் ஸ்வீடா மாகாணத்தில் ட்ரூஸ் இன மக்களுக்கும், பெடோயின் பழங்குடியினருக்கும் இடையிலான மோதல்களைக் கட்டுப்படுத்த, அந்நாட்டின் இடைக்கால அரசின் படைகள் தலையிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிரியா நாட்டில் சிறும்பான்மையினரான ட்ரூஸ் மக்கள் அதிகம் வசிக்கக் கூடிய ஸ்வீடா மாகாணத்தில், கடந்த 2 நாள்களாக மோதல்கள் நடைபெற்று வருகின்றன. ட்ரூஸ், பெடோயின் இன மக்களுக்கு இடையிலான இந்த மோதல்களில் 100-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், அம்மாகாணத்தில் ஊரடங்கு பிறப்பித்து மோதல்களை முடிவுக்கொண்டு வருவதற்கு, சிரியாவின் இடைக்கால அரசின் படைகள் முயன்று வருகின்றன.

# செய்யாறில் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி புதிய அறிவிப்பு

**சென்னை, ஜூலை 16-**

செய்யாறு தொகுதியில் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கக்கோரி அதிமுக சார்பில் வரும் 19 ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.



இது குறித்து அ.தி.மு.க. பொதுசெயலாளர் இ.பி.எஸ். வெளியிட்ட அறிக்கையில் வருமாறு:-

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், செய்யாறு சிப்காட் தொழிற்சாலையில் உள்ளூர் மக்களுக்கு வேலை வழங்காமல் வெளி மாநிலத்தவருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி, உள்ளூர் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருவதை, தி.மு.க. அரசுகண்டும் காணாமலும் இருந்து வருகிறது.

எனது தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில், செய்யாறு அரசு மருத்துவனைக்கு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டு, தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வந்தது. தி.மு.க. ஆட்சியில் இம்மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்கு போதிய மருத்துவர்கள் நியமிக்கப்படாததாலும், நோயாளிகளுக்கு மருந்து முழுமையாக வழங்கப்படாததாலும், நோயாளிகள் பெரும் அவதிக்குஉள்ளாகின்றனர். எனது ஆட்சிக் காலத்தில், செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், இதுவரையிலும் இத்திட்டம் செயல்படுத்தப் படவில்லை.

தமிழ் நாடு மின்சார வாரியத்தின் சார்பில், வெம்பாக்கம் ஊராட்சியில் மின்திட்டம் அமைப்பதற்கு எனது தலைமையிலான அம்மாவின் அரசில் அரசாணை வெளியிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், விடியா தி.மு.க. ஸ்டாலின் மாடல் அரசு இத்திட்டத்தை கிடப்பில்போட்டுவைத்துள்ளது. மக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அ.தி.மு.க. திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தின் சார்பில், 19 ம் தேதி சனிக் கிழமை காலை 10 மணியளவில், செய்யாறு வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் கண்டனஆர்ப்பாட்டம் நடைபெறும் .இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், அ.தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஏ.ராமு தலைமையிலும், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் தூசி மோகன், முன்னிலையிலும் நடைபெறும். இவ்வாறு அந்த அறிக்கையில் இ.பி.எஸ். கூறியுள்ளார்.

## அஜித்குமார் கொலை வழக்கு:

# திருப்புவனம் காவல் நிலையத்தில் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை

**சிவகங்கை, ஜூலை 16-**

மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கு தொடர்பாக திருப்புவனம் காவல் நிலையத்தில் சி.பி.ஐ. விசாரணை நடத்தினர்.

சிவகங்கை மாவட்டம், மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலுக்கு வந்த பேராசிரியை நிகிதா காரில் வைத்திருந்த தனது நகைகள் காணாமல் போனதாக திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து, அந்தக் கோவிலில் காவலாளியாக பணியாற்றிய அஜித்குமாரை காவல் துறையினர் விசாரணைக்கு அழைத்துச் சென்று தாக்கியதில் அவர் ஜூன் 28-ம் தேதி கொல்லப்பட்டார்.

இந்த விவகாரத்தில் தனிப்படை போலீசார் கண்ணன், ஆனந்த், பிரபு, சங்கரமணிகண்டன், ராஜா ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டனர். சி.பி.ஐ.-க்கு மாற்றப்பட்ட இந்த வழக்கை அதிகாரிகள் விரைந்து விசாரணை நடத்தி, இதன் அறிக்கையை வரும் ஆகஸ்ட் 20-ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டது. இதற்காக வழக்கின் விசாரணை அதிகாரியாக சி.பி.ஐ. காவல் துணைக் கண்காணிப்பாளர் மோஹித் குமார் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் திருப்புவனம் காவல் நிலையத்தில் சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று விசாரணை மேற்கொண்டனர். மடப்புரம் கோவில் வளாகம், கோவிலுக்கு எதிரே கார் நிறுத்துமிடம், தவளைகுளம் கண்மாய்க் கரை உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு விசாரணை மேற்கொண்ட நிலையில், காவல் நிலையத்திலும் விசாரணை நடத்தினர்.

# சீனாவில் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு

**பீஜிங், ஜூலை 16-**

சீனாவில் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற மாநாடு நடைபெற்றது. இதில் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்(எஸ்சிஓ) தற்போதைய தலைவராக சீனா உள்ள நிலையில், அந்த அமைப்பின் வெளியுறவு மந்திரிகள் மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் சீனா சென்றுள்ளார். இதற்கிடையே, சீன அதிபர் ஜி ஜின்பிங்கை இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். 2020 கல்வான் பள்ளத்தாக்கு மோதலுக்குப் பிறகு சீன அதிபரை ஜெய்சங்கர் முதல் முறையாக சந்தித்துள்ளார்.


எஸ்.சி.ஓ. வெளியுறவு மந்திரிகள் மாநாட்டில், எஸ்சிஓ அமைப்பின் உறுப்பு நாடுகளான சீனா, ரஷியா, இந்தியா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பெலாரஸ் ஆகிய 10 நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள வெளியுறவு மந்திரிகள் கூட்டாக நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர். வெளியுறவுத்துறை மந்திரியாக பொறுப்பேற்ற பின் ஜெய்சங்கர் சீனா செல்வது இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# தீருவண்ணாமலை அருகே கேட் கீப்பர் பணியிடை நீக்கம்

**திருவண்ணாமலை, ஜூலை 16-**

திருவண்ணாமலை மாவட்டம் தண்டரை - திருக்கோவிலூர் இடையிலான சாலையில் ரயில்வே கேட் உள்ளது. இந்த பகுதியை நாகர்கோவிலில் இருந்து கச்சிக்குடா செல்லும் ரயில் கடக்க முற்பட்டது. அப்போது ரயில்வே கேட் மூடப்படாமல் இருந்ததை லோகோ பைலட் கண்டார். இதைக் கண்டு சுதாரித்துக்கொண்ட லோகோ பைலட், ரயிலை உடனடியாக நிறுத்தினார். இதையடுத்து தானே கீழே இறங்கிச் சென்று ரயில்வே கேட்டை மூடினார். இதன் பின்னர் அவர் ரயிலை இயக்கிச் சென்றார். ரயில் வரும் நேரத்தில் கேட்டை மூடாமல் அலட்சியமாக செயல்பட்ட கேட் கீப்பர் மீது லோகோ பைலட் அளித்த புகாரின் அடிப்படையில், கேட் கீப்பர் ராமு பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

**16-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வாயை அடக்கி வம்புக்கு செல்லாதிருப்பது சுகம். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**ரிஷபம்:-** ஆரோக்கியம் மேம்படும், மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவார். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு. பெண்களால் ஆண்களுக்கு ஆதாயம் ஏற்படும்.

**மிதுனம்:-** சிலருக்குச் சாதகமான திடீர் பயணங்கள் ஏற்படும். தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். சுகமும் சந்தோஷமும் அதிகரித்து, இந்த ராசிக்காரர்கள் குஷியாக இருக்கும் நாள் இன்று.

**கடகம்:-** வாகன யோகம் ஏற்படும். காதல் வயப்படும் நாள். பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். அரசால் ஆதாயம் உண்டு. தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

**சிம்மம்:-** மாற்றம் ஒன்றே மாறாதது. எனவே, மாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்..

**கன்னி:-** புகழ், மரியாதை கூடும். பெரிய மனிதர் எனப் பெயரெடுப்பர். சஸ்திர அறிவு கூடும். சந்ததி விருத்தி உண்டு. அரசுத் துறைகள் மூலம் ஆதாயங்கள் பெருகும். வலிய வந்து உறவினர் உதவுவர்.

**துலாம்:-** நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நினைத்தபடி எதுவும் நடக்காது. பிற்பகலில் வாழ்க்கையில் புது திருப்பங்கள் ஏற்படும். தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் ஈடேறும்.

**விருச்சிகம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். புதிய உற்சாகம் உண்டாகும். பகைவர்கள் விலகி ஓடுவர். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் குழந்தைகள் மீது அன்பும், பாசமும் பெருகும்.

**தனுசு:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். எதிர்பார்த்த தன வரவும், இனிய தூக்கமும் குறையும்.

**மகரம்:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும் நாள். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள்.

**கும்பம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடுவது நல்லது.

**மீனம்:-** வாகன யோகம் உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என இராஜயோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

# புதுவையில் அரசு பள்ளி மாணவர்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு: முதல்வர் ரங்கசாமி

**புதுச்சேரி, ஜூலை 16-**

அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் மட்டுமின்றி, பிற படிப்புகளுக்கும் 10% இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.

ரசு பள்ளி கல்வி இயக்ககம் சார்பில் காமராஜர் பிறந்த நாளையொட்டி, மாணவர் நாள் விழா கருவடிக்குப்பத்தில் உள்ள காமராஜர் மணிமண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில், கலந்துகொண்ட முதல்வர் ரங்கசாமி காமராஜர் பிறந்த நாள் விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பேசியது: "காமராஜர் ஊழலற்ற ஆட்சியை கொடுத்தார். கல்விக்கு முக்கியத்துவம் அளித்தார். நாட்டின் அனைத்து தலைவர்களுக்கும் வழிகாட்டியாக வாழ்ந்தார்.

கல்விக்காக அரசானது ஆண்டுக்கு ரூ.1,350 கோடியை ஒதுக்குகிறது. இதில் பள்ளிக் கல்விக்காக ரூ.950 கோடியை செலவிடுகிறது. அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியில் 10 சதவீத இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டு படித்து வருகின்றனர்.

பிற படிப்புகளுக்கும் 10 சதவீத இடஒதுக்கீடு கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது இந்த கல்வியாண்டிலேயே நடைமுறைப்படுத்தப்படும்.

நல்ல நூல்களை படித்தால் நல்ல சிந்தனையாளராக வர முடியும். அதன்மூலம் மற்றவர்களுக்கு உதவ முடியும். எனவே பிள்ளைகள் நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.

நன்றாக படித்த வாழ்க்கையில் முன்னேற வேண்டும்" என்று முதல்வர் ரங்கசாமி கூறினார். இவ்விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், ஜான்குமார் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# அன்புமணியுடனான மோதல் போக்கு விரைவில் சரியாகும்: ராமதாஸ் பதில்

**சென்னை, ஜூலை 16-**

அன்புமணியுடனான மோதல் போக்கு விரைவில் சரியாகும் என்று பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரம் தோட்டத்தில் நிருபர்களை ராமதாஸ் சந்தித்தார். அன்புமணியும், ஜி.கே.மணியும் சந்தித்து பேசி இருக்கிறார்கள் என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு, ''அது என்ன பேசினார்கள், ஏது பேசினார்கள் என்று கேட்டுவிட்டு நாளை சொல்லட்டுமா'' என ராமதாஸ் பதில் அளித்தார்.

கேள்வி: அம்மா சின்னய்யாவை சென்று பார்த்து வந்துள்ளார்?

ராமதாஸ் பதில்: இந்த கேள்வியே தப்பு... அம்மா பிள்ளையை சந்திக்கலாம். பிள்ளை அம்மாவை சந்திக்கலாம். இது சகஜமான ஒன்று தான்.

கேள்வி: உங்களுடைய அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன?

பதில்: காத்திருப்போம்... காத்திருப்போம்...காலங்கள் வந்துவிடும்.

கேள்வி: தேர்தல் நெருங்கி கொண்டிருக்கிறது, உங்களுடைய மோதல் போக்கு தொடர்கிறது. எப்பொழுது சரியாகும்?

4 நாட்கள் தொடரும், பின்னர் சரியாகிவிடும், விரைவில் சந்திப்போம் என பதில் அளித்து விட்டு, காரில் ராமதாஸ் புறப்பட்டு சென்றார்.



கடலூர்மாவட்டம், சிதம்பரத்தில்முதல்வர்மு.க.ஸ்டாலின்உங்களுடன்ஸ்டாலின்என்றபுதிய திட்டத்திற்கான முகாமினை தொடங்கி வைத்து, காதொலி கருவி வேண்டி விண்ணப்பித்த மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே காதொலி கருவி வழங்கி அவரது கோரிக்கையை நிறைவேற்றினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் நேரு, எ.வ.வேலு, பன்னீர்செல்வம், சாமிநாதன், கணேசன், எம்.பிக்கள்திருமாவளவன், ரவிக்குமார், விஷ்ணு பிரசாத், எம்.எல்.ஏக்கள் செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், வேல்முருகன், ராஜேந்திரன், அய்யப்பன், ராதாகிருஷ்ணன், தலைமைச்செயலாளர் முருகானந்தம், அமுதா, கடலூர் கலெக்டர் ஆதித்யா செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருப்புவனம் இளைஞர் கொலை வழக்கில் கைதான 5 போலீசாருக்கும் காவல் நீட்டிப்பு

**சிவகங்கை, ஜூலை 16-**

திருப்புவனம் இளைஞர் கொலை வழக்கில் கைதான 5 போலீசாருக்கும் காவல் நீட்டிக்கப் பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள காளி கோயில் காவலாளி நகை திருட்டு குற்றச்சாட்டின் பேரில் தனிப்படை காவலர்களால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்க மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷை விசாரணை அதிகாரியாக மதுரை ஐகோர்ட் கிளை நியமனம் செய்தது இந்த விசாரணையின் இடைக்கால அறிக்கையை விசாரணை அதிகாரி கடந்த 8 ஆம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதற்கிடையே, இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்கும் என்று தமிழக அரசு கூறியிருந்தது. இதையடுத்து, வழக்கின் விசாரணையை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றிய உயர் நீதிமன்றம், ஆக. 20 ல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டது. இந்த நிலையில், அஜித்குமார் மரண வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்துள்ளது. இதையடுத்து விசாரணை நடத்த ஏதுவாக, விசாரணை அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். டெல்லி சி.பி.ஐ. டிஎஸ்பி மோகித் குமார் விசாரணை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் தொடங்கியுள்ளது.

இதற்கிடையே , காவலாளி அஜித்குமாரை தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் கைதான 5 போலீசாரும் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நீதிமன்றக்காவல் இன்றுடன் முடிந்த நிலையில், காவலர்கள் ஐந்து பேரும் காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்படனர். இதையடுத்து, நீதிமன்றக் காவலை வரும் 30 ஆம் தேதி வரை நீட்டித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு

## இருதரப்பு உறவு குறித்து விளக்கம்

**பெய்ஜிங், ஜூலை 16-**

சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்த வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இருதரப்பு உறவுகளின் சமீபத்திய வளர்ச்சி குறித்து விளக்கியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்(எஸ்.சி.ஓ.) தற்போதைய தலைவராக சீனா உள்ள நிலையில், அந்த அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்று (ஜூலை 15) நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக நேற்று சீனா சென்ற ஜெய்சங்கர், அந்நாட்டின் துணை அதிபர் ஹான் ஜெங்கை சந்தித்துப் பேசினார். அப்போது, இந்தியா - சீனா இடையேயான உறவு தொடர்ந்து இயல்பு நிலையில் இருக்க அவர் அழைப்பு விடுத்தார்



இந்நிலையில், நேற்று காலை சீன அதிபர் ஜி ஜின்பிங்கை ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். தனது இந்த சந்திப்பு குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இன்று (நேற்று) காலை பெய்ஜிங்கில் அதிபர் ஜி ஜின்பிங்கை எனது சக எஸ்.சி.ஓ. வெளியுறவு அமைச்சர்களுடன் சந்தித்தேன். குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரின் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். நமது இருதரப்பு உறவுகளின் சமீபத்திய வளர்ச்சி குறித்து அதிபர் ஜி ஜியிடம் விளக்கினேன். அந்த வகையில் நமது தலைவர்களின் வழிகாட்டுதலை மதிக்கிறேன்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்விக்கண் திறந்த பெருந்தலைவர்

# காமராஜருக்கு புகழ் வணக்கம்: முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி

**சென்னை, ஜூலை 16-**

கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜருக்கு புகழ் வணக்கம் என்று காமராஜரின் 123-வது பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டை 9 வருடங்கள் ஆட்சி செய்த பெருந்தலைவர் காமராஜரின் 123-வது பிறந்தநாளான நேற்று கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது.

அரசியல் தலைவர்கள், காமராஜரின் புகழ்போற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், காமராஜரின் பிறந்தநாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; "அன்று பள்ளிகளில் இட்டது மதிய உணவல்ல; நூற்றாண்டுக் கல்விக் கனவுக்கான அடித்தளம்! நல்லவேளை, "பள்ளியில் கல்விதான் கொடுக்க வேண்டும்; சோறு போட அது என்ன ஹோட்டலா?" என்று அதிமேதாவியாய்ப் பேசும் அறிவுக்கொழுந்துகள் இல்லை அன்று. அதனால்தான், எத்தனை நன்மை தமிழ்நாட்டிற்கு இன்று! கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசருக்குப் புகழ் வணக்கம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரும் 25-ம் தேதி எம்.பி.யாக பதவியேற்கிறார் கமல்ஹாசன்

**சென்னை, ஜூலை 16-**

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஜூலை 25-ம் தேதி நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கிறார்.

மக்கள் நீதி மய்யம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மாநிலங்களவை (ராஜ்ய சபா) தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன், மக்கள் நீதி மய்யத்தின் சார்பாக மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கமல்ஹாசன், வருகிற 25-ம் தேதி அன்று நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு பதவியேற்கவுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்" இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தி.மு.க. வேட்பாளர்களான பி.வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், அ.தி.மு.க. வேட்பாளர்கள் ஐ.எஸ்.இன்பதுரை, தனபால் ஆகிய 6 பேரும் மாநிலங்களவை உறுப்பினர்களாக போட்டியின்றித் தேர்வாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காமராஜர் ஆற்றிய பணிகள் தமிழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும்

## துணை முதல்வர் உதயநிதி பெருமிதம்

**சென்னை, ஜூலை 16-**

பெருந்தலைவர் காமராஜர் ஆற்றியப்பணிகள் தமிழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும் என உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், கல்வி எனும் ஒளி சமூகத்தில் மண்டிக்கிடந்த இருளை எப்படியெல்லாம் கிழித்தெறியும் என்பதை சாத்தியப்படுத்திக் காட்டிய கர்ம வீரர் காமராஜரின் பிறந்தநாள் இன்று (நேற்று). எட்டாக்கனியாக இருந்த கல்வி, ஏழை - எளிய பிள்ளைகள் எல்லோருக்கும் சென்று சேர பள்ளிகளை திறந்து, மதிய உணவிட்ட காமராஜரின் பிறந்த நாளை, கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

காமராஜர் வாழ்ந்த தியாகராய நகர் இல்லத்தை புதுப்பிப்பதோடு, அவர் பெயரில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை திருச்சியில் அமைக்கிறார் நம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். காமராஜர் கண்ட கல்விக் கனவுகளை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்களின் வழியே நனவாக்கி வருகிறது நம் திராவிட மாடல் அரசு.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆற்றியப்பணிகள் தமிழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும் - வழிகாட்டும். அவர் புகழ் ஓங்கட்டும்.

என தெரிவித்துள்ளார்.

# கேரள நர்ஸ் நிமிஷா மரண தண்டனை ஒத்திவைப்பு

**புதுடெல்லி, ஜூலை 16-**

கேரளாவைச் சேர்ந்த நிமிஷா பிரியாவுக்கு இன்று (ஜூலை 16) நிறைவேற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மரண தண்டனை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கேரளா வின் பாலக்காட்டை சேர்ந்தவர் நிமிஷா பிரியா (38). இவர் ஏமன் நாட்டை சேர்ந்த ஜவுளி வியாபாரி தலால் அப்டோ மெஹ்தியுடன் இணைந்து புதிய மருத்துவமனையை தொடங்கினார். பின்னர் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கடந்த 2017-ம் ஆண்டு ஜூலையில் மெஹ்திக்கு, நிமிஷா மயக்க ஊசியை செலுத்தினார். இதில் அவர் உயிரிழந்தார்.

இந்த வழக்கில் நிமிஷாவுக்கு நாளை மரண தண்டனை நிறைவேற்றப்பட இருந்தது. மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை தவிர்க்க மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. "நிமிஷா பிரியாவுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருகிறது. வழக்கில் தொடர்புடைய அனைத்து தரப்பினருடனும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீ



ர்வை எட்ட அரசு முயல்கிறது. இதற்காக இந்திய அதிகாரிகள், உள்ளூர் சிறை அதிகாரிகள், வழக்கறிஞர் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்பில் உள்ளனர்.

இது மரண தண்டனை ஒத்திவைக்கப்படுவதை சாத்தியமாக்கி உள்ளது" என அதிகாரிகள் தெரிவித்தனர். ஷரியா என்றழைக்கப்படும் இஸ்லாமிய சட்டத்தில் குருதிப் பணம் என்பது ஒரு வகையான நீதியாக கருதப்படுகிறது. எனவே, பிரியா குடும்பத்தினர் சார்பில் உயிரிழந்த மெஹ்தி குடும்பத்தினருக்கு ரூ.8 .6 கோடியை வழங்க முன்வந்தனர். அதை மெஹ்தி குடும்பத்தினர் ஏற்றார்களா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

## காமராஜர் பிறந்தநாள்:

# கவர்னர், அரசியல் கட்சி தலைவர்கள் புகழாரம்

**சென்னை, ஜூலை 16-**

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் காமராஜரின் பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி தமிழக ஆளுநர் ரவி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் வாழ்த்துச் செய்திகளை அளித்துள்ளனர்.

தமிழக ஆளுநர் ரவி: பெருந்தலைவர் காமராஜர் தேசபக்தி நிறைந்த தேசியவாதி, துணிச்சல்மிகு சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் நவீன தமிழ்நாடு மீது தொலைநோக்குப் பார்வை கொண்ட சிற்பியாக விளங்கினார்.

ஒவ்வோர் கிராமத்திலும் பள்ளிகளை நிறுவுவதன் மூலம் கல்வியை உலகளாவியதாக மாற்றினார், புரட்சிகரமான மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கினார், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயிகளை மையமாகக் கொண்ட சீர்திருத்தங்கள் மூலம் விவசாயத்தை புத்துயிர் பெறச்செய்தார்.

இன்று, தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உள்ளது - அதற்கு காரணமான அவரது தொலைநோக்குப் பார்வை மற்றும் உள்ளடக்கிய தலைமைக்கு நன்றி என்று தெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமி: கல்லாமை எனும் இருள் அகற்றிட கண் துஞ்சாது உழைத்திட்ட பெருந்தலைவர். சத்துணவு தந்து மாணவர்களின் பசிப்பிணியை போக்கிய சரித்திர நாயகர். நிர்வாக திறனுக்கு எடுத்துக்காட்டாகவும், எளிமைக்கு இலக்கணமாகவும், பொது நல வாழ்வின் உதாரண அவதாரமாக திகழ்ந்த கர்மவீரர் காமராஜர் பிறந்த தினத்தில் பெருந்தலைவரின் பெரும் புகழை போற்றி வணங்குகிறேன்.

உதயநிதி ஸ்டாலின்: எட்டாக்கனியாக இருந்த கல்வி, ஏழை - எளிய பிள்ளைகள் எல்லோருக்கும் சென்று சேர பள்ளிகளை திறந்து, மதிய உணவிட்ட காமராஜரின் பிறந்த நாளை, கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்தார் கருணாநிதி. காமராஜர் வாழ்ந்த தியாகராய நகர் இல்லத்தை புதுப்பிப்பதோடு, அவர் பெயரில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை திருச்சியில் அமைக்கிறார் நம் முதல்வர் ஸ்டாலின். பெருந்தலைவர் காமராஜர் ஆற்றியப்பணிகள் தமிழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும் - வழிகாட்டும். அவர் புகழ் ஓங்கட்டும்.

அன்புமணி: தமிழ்நாட்டில் கல்விப்புரட்சி, தொழில் புரட்சி, வேளாண்புரட்சி ஆகிய அனைத்துக்கும் வித்திட்டவர். அறிவுப்பசியை அணைக்க வயிற்றுப்பசி தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக மதிய உணவுத் திட்டத்தை அறிமுகம் செய்த மகான் அவர். அவர் எத்தகைய ஆட்சியைக் கொடுத்தாரோ, அத்தகைய ஆட்சி தமிழ்நாட்டுக்கு மீண்டும் கிடைக்கும் என்றால் அது தான் உண்மையான பொற்காலமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

டிடிவி: ஏழை, எளிய மக்களின் நலனையே லட்சியமாகக் கொண்டு, தனக்குக் கிடைத்த பதவிகள் அனைத்தையும் சேவை செய்வதற்கான வாய்ப்பாகக் கருதி கல்வி, விவசாயம், சுகாதாரம் மற்றும் தொழில்துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய பெருந்தலைவர் காமராஜர் ஆற்றிய அரும்பெரும் பணிகளை அவர் பிறந்த இந்நாளில் போற்றிக் கொண்டாடுவோம்.

## 123-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து விஜய் மரியாதை

**சென்னை, ஜூலை 16-**

பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளையொட்டி அவரது சிலைக்கு, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், காலத்தாலும் களவாட முடியாத கருவூலம் கல்வி தான் என்பதை அன்றே கணித்து, தமிழகத்தில் கல்விச் சாலைகள் கட்டமைத்தவர். உழவர் பெருங்குடி மக்களின் உள்ளங்கள் குளிர, பாசனப் பயன்பாட்டுக்கு அணைகளைக் கட்டியவர்.

வீடு உயர்ந்தால் நாடு உயரும் என்று வேலைவாய்ப்புகளைப் பெருக்கத் தொழிற்சாலைகளை உருவாக்கியவர். தன்னலமற்ற சேவைகளால் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்தவர், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்.

கழகத்தின் கொள்கைத் தலைவர்களில் ஒருவரான பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தமது ஆட்சியில்



மதச்சார்பின்மையையும் நிர்வாகத்தில் நேர்மையையும் கடைப்பிடித்தவர்.

சமூகநீதிக் கொள்கை வழியில் எளியவர்களுக்கும் அதிகாரமளித்து, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்ற பெருமைக்குரியவர்.

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளையொட்டி, சென்னை, பனையூரில், கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.

என தெரிவித்துள்ளார்

# புதிய பாஸ்போர்ட் கோரி சீமான் மனு: பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஜூலை 16-**

பாஸ்போர்ட் தொலைந்து விட்டதால், புதிய பாஸ்போர்ட் வழங்கக் கோரி நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தாக்கல் செய்த மனு குறித்து அறிக்கை தாக்கல் செய்ய மண்டல பாஸ்போர்ட் அதிகாரி, நீலாங்கரை காவல் ஆய்வாளர் ஆகியோருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக சீமான் தாக்கல் செய்த மனுவில், வெளிநாடு செல்வதற்காக பாஸ்போர்ட்டை தேடிய போது அது காணாமல் போனது தெரிய வந்ததாகவும், அதனை தேட தீவிர முயற்சி செய்தும், கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கூறியுள்ளார். அதனால் புதிய பாஸ்போர்ட்டை வழங்கக் கோரி மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு விண்ணப்பித்த போது, நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளைச் சுட்டிக்காட்டி, தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அரசியல் காரணங்களுக்காக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், புது பாஸ்போர்ட் வழங்கக் கோரிய விண்ணப்பத்தை நிராகரித்த உத்தரவை ரத்து செய்து, பாஸ்போர்ட் வழங்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியுள்ளார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், மண்டல பாஸ்போர்ட் அதிகாரியும், நீலாங்கரை காவல் நிலைய ஆய்வாளரும் அறிக்கை அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஜூலை 22 ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# மனுக்களுக்கு தீர்வு காணப்படவில்லை: அதிகாரிகள் மீது துரைமுருகன் ஆதங்கம்

**வேலூர், ஜூலை 16-**

''பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மனுக்களாகவே உள்ளன. அதற்கான தீர்வு ஏற்படவில்லை என்று காட்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆதங்கத்துடன் பேசினார்.

வேலூர் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட சிறப்பு முகாம் தொடக்கவிழா காட்பாடி செங்குட்டையில் நேற்று (ஜூலை 15) நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், முகாமை தொடங்கி வைத்து பேசும்போது, "பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக அளிக்கும் மனுக்களுக்கு சாக்கு, போக்கு சொல்லாமல் உடனடியாக நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் இங்கு வந்ததில் இருந்து சிறப்பாக வேலை செய்கிறார். அவர் மட்டும் வேலை செய்தால் போதாது. உடன் இருக்கின்ற அதிகாரிகளும் சரியாக இருந்தால் தான் பரிகாரம் கிடைக்கும். பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மனுக்களாகவே உள்ளன. அதற்கான தீர்வு ஏற்படவில்லை. எனவே, பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை உடனடியாக பரிசீலினை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். பின்னர், செய்தியாளர்கள் சந்திப்பில், 'நடிகர் ரஜினிகாந்த் சீனியர்களின் ஆலோசனை ரொம்ப முக்கியம் என பேச நினைத்ததை மறந்துவிட்டேன்' என நிகழ்ச்சி ஒன்றில் கூறியிருந்தார்' என்ற கேள்விக்கு, துரைமுருகன் கூறும்போது, 'நானும் அந்த வீடியோவை பார்த்தேன். அவரை செல்போனில் தொடர்புகொண்டு இப்பவாச்சும் மறக்காம பேசுனீங்களே ரொம்ப தேங்க்ஸ் சார் என்றேன்' என கூறினார்.

## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்திட்டத்தின்

# தொகுப்பூதிய பணியாளர்களுக்கு 5 சதவீத ஊதிய உயர்வு அறிவிப்பு

**சென்னை, ஜூலை 16-**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் பணியாற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு 5 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு ஜூன் 1-ம் தேதி முதல் இந்த ஊதிய உயர்வு அமல்படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாநில திட்ட இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் புரோகிராமர், சிவில் பொறியாளர், கணக்கு மற்றும் தணிக்கை மேலாளர், எம்.ஐ.எஸ். ஒருங்கிணைப்பாளர், எஸ்எம்சி கணக்காளர், தரவு பதிவு அலுவலர், அலுவலக உதவியாளர், உதவியாளர் ஆகியோருக்கு 5 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படும்.

நடப்பாண்டு ஜூன் 1-ம் தேதி முதல் இந்த ஊதிய உயர்வு அமல்படுத்தப்படும். அரசுப் பணியில் உள்ள ஓய்வு பெற்ற ஆலோசகர்கள், உதவியாளர்களுக்கு இது பொருந்தாது. ஊதிய உயர்வு பெற ஓராண்டு பணி அனுபவம் கட்டாயமாகும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழக வரலாற்றில் நியாயமான கோரிக்கைகளை மறுக்கும் முயற்சிகள் வெற்றி பெற்றதில்லை. பகுதி நேர ஆசிரியர்களை அழைத்துப் பேசி அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உடனடி நடவடிக்கை எடுத்து அவர்களின் போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

**- அன்புமணி**



செய்தி மக்கள் தொடர்புத்துறை இருக்கும்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை செய்தித் தொடர்பாளராக நியமிப்பது ஏன்?. அரசின் திட்டங்களை அமைச்சர்கள் மக்களுக்கு கூறாமல் அதிகாரிகள் கூறினால் அதன் பெயர் எமர்ஜென்சி நிலை. இப்போது மக்களாட்சி இல்லை, அதிகாரிகள் ஆட்சியே நடக்கிறது என்பதற்கு இந்த நியமனமே உதாரணமாகும்.

**- ஜெயக்குமார்**



வரும் தேர்தலில் தி.மு.க.,விற்கு விழும் 4 ஓட்டுகளில் ஒரு வாக்கு விடுதலை சிறுத்தை கட்சி ஓட்டாக இருக்கும். 100 ஓட்டுகளில் 25 ஓட்டுகள் விடுதலை சிறுத்தை கட்சியின் ஓட்டுகளாக இருக்கும். ஒரு ஓட்டு கூட சிந்தாமல் சிதறாமல், தி.மு.க., தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு கொத்து கொத்தாக விழும் என்கிற அளவிற்கு நாங்கள் களப்பணி ஆற்றுவோம்.

**- திருமாவளவன்**



தேர்தல் வரும் போது தோண்டப்பட்ட குழிகள் மூடப்படும். சாலைகள் போடப்படும். எல்லாம் நடக்கும். மின்சாரங்கள் அணையாமல் கொடுக்கப்படும். இது தான் தேர்தல் அரசியல், கட்சி அரசியல். என்றைக்கு இந்த இரண்டையும் கடந்து மக்கள் அரசியல் இந்த மண்ணில் மலர்கிறதோ அன்று தான், காமராஜரின் ஆட்சி இந்த மண்ணில் மலரும்.

**- சீமான்**



சென்னை மண்ணடி தில்லை விநாயகர் கோயிலுக்கு உபயதாரர் வழங்கிய வெள்ளி பூஜை பொருட்களை பெற்று திருக்கோயில் நிர்வாகத்திடம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இதில் சென்னை மண்டல இணை ஆணையர் முல்லை, மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு கலந்து கொண்டனர்.

# சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் வீடு வீடாக உங்களுடன் ஸ்டாலின் திட்டம்: துணைமுதல்வர் தொடங்கி வைத்தார்

**சென்னை, ஜூலை-16**

உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தின் கீழ் சென்னை சேப்பாக்கம் –திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற முகாமினை துணை முதலமைச்சர். உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்து மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளைவழங்கினார்.

;உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சென்னை சேப்பாக்கம் –திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகாவீர் ஜெயின் பவன் திருமணமண்டபத்தில் நேற்று நடைபெற்ற முகாமினைதுணை முதலமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டுமனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளைவழங்கினார்.

மக்கள் அன்றாடம் அணுகும்அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களின் கீழ் பொதுமக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் ;உங்களுடன் ஸ்டாலின்திட்டமுகாமினை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் நேற்று தொடங்கிவைத்தார்;உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தின் கீழ் ஜூலை 15 முதல் நவம்பர்2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 10,000 முகாம்கள்நடைபெறவுள்ளது.இத்திட்டத்தின் கீழ் நகர்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும், ஊரகப் பகுதிகளில்6,232 முகாம்களும் நடைபெற உள்ளன. இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த46 சேவைகளும் வழங்கப்பட உள்ளன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும்பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க,மருத்துவ முகாம்களும் நடத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள் 7.7.2025 முதல் ஒவ்வொரு வீட்டிற்கும்நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள். இடம் குறித்த விவரங்கள், அங்குவழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்/ சேவைகளை விவரித்து,அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து\தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கி\வருகின்றனர். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் ;உங்களுடன் ஸ்டாலின்முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ளவிடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச்சென்று, விண்ணப்பத்தினை பெற்று, பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனசென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக நேற்று தொடங்கியது இந்த முகாம்கள் ஆகஸ்ட் மாதம் 14.வரை "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் 109 முகாம்கள்நடைபெறுகிறது. தினந்தோறும் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரைநடைபெறும்.



சென்னை சேப்பாக்கம் –திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில்நடைபெற்ற ;உங்களுடன் ஸ்டாலின்முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும்\குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு,உணவு\மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும்திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறுமற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர்உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைஉள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் மக்களிடமிருந்து மனுக்கள் பெற்று உரியபதிவுகளை மேற்கொண்டு அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது.

முகாமிற்குவருகை தந்த பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், சிறப்பமருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்டமகளிர் இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கானவிண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து வழங்கினர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றதொகுதிக்குட்பட்ட மகாவீர் ஜெயின் பவன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற முகாமினை பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்தபொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு சென்னைமேயர் ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்பி., ,எம்எல்ஏகள் .த.வேலு\.ஜோசப் சாமுவேல், துணைமேயர். மு.மகேஷ் குமார், ஆணையாளர் குமரகுருபரன், மற்றும் அரசு அலுவலர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காமராஜரின் 123 வது பிறந்தநாளையொட்டி ராயபுரம் ரவுணடப் மக்கள் இயக்கத்தின் சார்பில் மாலையணிவித்து மரியாதை

**சென்னை, ஜூலை – 16**

பெருந்தலைவர் காமராஜரின் 123 வது பிறந்தநாளையொட்டி சென்னை எம்.சி.ரோட்டில் உள்ள காமராஜரின் உருவச்சிலைக்கு ராயபுரம் ரவுணடப் மக்கள் இயக்கத்தின் சார்பில் நேற்று மாலையணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது, வழக்கறிஞர் எல்., முருகவேலு தலைமையிலான இந்த நிகழ்வில் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை பொது செயலாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு கலந்துகொண்டு பேசினார்,

இந்த நிகழ்ச்சியில் சென்னை வண்ணாரப்பேட்டையில் ஆட்டோவில் தவறவிட்ட 8 சவரன் நகையை நேர்மையுடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனர் சரவணனுக்கு மாலைகளும் சால்வைகளும் குவிந்தன, வடசென்னை வியாபாரிகள் சங்கத்தலைவர் ஜி.ராபர்ட்., ராயபுரம் ரவுண்டப் மக்கள் இயக்கத்தலைவர் எல்.முருகவேலு, முனைவர் தண்டபாணி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அதிசய எட்வர்ட் ராஜா, டி. ராஜகாந்தி ஆகியோர் பாராட்டி சால்வைகள் மாலைகள் அணிவித்தனர், ஆட்டோ ஓட்டுனர் கூட்டமைப்பு தலைவர் மு.சம்பத், முனைவர் கில்டா ஆகியோர் ஆட்டோ ஓட்டுனர் சரவணனை வெகுவாக பாராட்டினர்,

முன்னதாக அண்ணா பூங்கா நடப்போர் நலச்சங்கத் தலைவர் நா.மனோகரன், காமராஜரை போற்றும் வகையில் பல்வேறு சம்பவங்களை விளக்கினார், இந்த நிகழ்ச்சியில் தையல் கலைஞர் கே.ஏ.ராமலிங்கம் பூங்கா குணசேகரன், முனைவர் சுந்தர் எஸ்.எஸ்.ஜெயமோகன், , தருமலிங்கம், நடிகர் ஏசிஎல் சீனிவாசன், ஆப்டிகல் கோபி, அன்பு நித்யா, வழக்கறிஞர் சித்தார்த்தன், அண்ணாதுரை, ஆர்கே.நகர் தேமுதிக பகுதி செயலாளர் ஆன்ந்த் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்,



**சென்னை தண்டையார் பேட்டை பட்டேல் நகரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை கலாநிதி வீராசாமி எம்பி துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் எம்எல்ஏக்கள் எபினேசர், சேகர், மண்டல குழு தலைவர் நேதாஜி.யு.கணேசன், துணை ஆணையர் கட்டா ரவி உள்ளனர்.**



காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில், அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று, பதிவு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர். இதைத்தொடர்ந்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர். மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி, கூட்டுறவு துறை மண்டல இணை பதிவாளர் ஜெயஸ்ரீ, சார் - ஆட்சியர் மிருணாளினி ஆகியோர் உடனிருந்தனர்.



**சென்னை போரூர் அருகே கருணாநிதியின் 102 வது பிறந்த நாள் மற்றும் திமுக அரசின் நான்காண்டு சாதனை தெருமுனை கூட்டம் மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் தலைமையில் நடைபெற்றது. எம்எல்ஏக்கள் காரம்பாக்கம் க.கணபதி ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தாயகம் கவி 11வது மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் 1002 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.**

# சூளைமேடு பகுதியில் ஆட்டோ ஓட்டுநரிடம் ஜிபேயில் பணம் செலுத்துவதாக கூறி ரூ.500 திருடிய இருவர் கைது

**சென்னை ஜூலை 16-**

சென்னை, அரும்பாக்கம், எம்.எம்.டி.ஏ. காலனியில் வசித்து வரும் அப்துல் அசிம், என்பவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். அப்துல் அசிம் 13ந் தேதி அன்று மதியம் ஒரு சவாரியை சூளைமேடு பகுதியில் இறக்கிவிட்டு, அருகிலுள்ள சக்திநகரில் ஆட்டோவை நிறுத்தி அமர்ந்திருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 3 வாலிபர்கள், ஆட்டோ ஓட்டுநர் அப்துல் அசிமிடம் தங்களுக்கு அவசரமாக பணம் தேவைப்படுகிறது. தற்போது கையில் பணமில்லை. உங்களுக்கு ஜிபேல் பணம் ரூ.500/- செலுத்துகிறேன். நீங்கள் பணம் ரூ.500/- கொடுங்கள் என கேட்டனர். உடனே அப்துல் அசிம் தனது செல்போனில் உள்ள ஜிபே வை காண்பித்தபோது, மூவரில் ஒருவர் தனது செல்போனிலிருந்து அப்துல் அசிம் செல்போனில் உள்ள ஜிபே கியூ ஆர் கோடு ஐ ஸ்கேன் செய்வதுபோல நடித்தபோது, அப்துல் அசிம் அவரது சட்டைப்பையில் இருந்து பணம் ரூ.500/-ஐ அந்த நபர்களிடம் கொடுத்துள்ளார். உடனே 3 பேரும் பணம் செலுத்தியாச்சு எனக்கூறி உடனே இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். பின்னர் அப்துல் அசிம் செல்போனில் சரி பார்த்தபோது, 3 பேர் ஜிபே ல் பணம் செலுத்தாமல் தப்பிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து அப்துல் அசிம் சூளைமேடு காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். சூளைமேடு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய 1.மதன்ராஜ், 2.சந்தோஷ், ஆகிய 2 பேரை கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 17 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். இவர்களிடமிருந்து பணம் ரூ.130/- மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி மதன்ராஜ் மீது ஏற்கனவே சூளைமேடு காவல் நிலையத்தில் 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்கு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இளஞ்சிறார், சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

# ஆலந்தூரில் தண்ணீர் லாரி கவிழ்ந்து விபத்து

**சென்னை ஜூலை 16-**

சென்னை ஆலந்தூரில் தண்ணீர் லாரி கவிழ்த்து விபத்து ஏற்பட்டது நல்வாய்ப்பாக எந்த உயிர்சேதமும் யாருக்கும் சிறுகாயங்கலோ ஏற்படாமல் அதிஷ்டவசமாக உயிர்தப்பினர். பூந்தமல்லியில் இருந்து சென்னை ஆலந்தூரில் மெட்ரோ ரயில் இணைப்பு சாலை பகுதிக்கு தண்ணீர் டேங்கர் லாரியில் டேங்கர் லாரி டிரைவர் தண்ணீர்ரை ஏற்றி கொண்டுவந்தார். ஆலந்தூரில் மெட்ரோ ரயில் சாலை இணைப்பு பகுதியில் சென்று கொன்றிருத்தபோது.ஏற்கனவே அந்த பகுதியில் மின்சார வாரியம் சார்பில் கேபில்கள் தோண்டப்பட்டு இருந்தது அந்த பள்ளத்தை சரியாக மூடவில்லை என கூறபடுகிறது. நேற்று கன மழை பெய்து இருததால் அந்த பள்ளமானது தண்ணீர் உரி இருந்து உள்ளது. அப்போது அந்த வழியாக வந்த லாரி பள்ளத்தில் சிக்கிக்கொண்டது லாரி டிரைவர் அதிஷ்டவசமாக கில்லே குதித்து உயிர்தப்பினர். தகவல் அறிந்த போக்குவரத்து போலீசார் தற்போது சம்பவ இடதுக்கு விரைந்து கிரேன் மூலம் இந்த லாரி அபூர்வபடுத்தும் பணியில் ஈடுபட்டுஇருக்கிறார்கள். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் எந்த போக்கு வரத்து நெரிசலோ வேறு பொதுமக்களுக்கு எந்த ஒரு இடையறோ இல்லை. பள்ளத்தால் தான் விபத்துக்கு காரணம் என போலீசார் தெரிவித்துள்ளார்கள்.

# சாலையில் கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த 4 பேர் கைது

**சென்னை ஜூலை 16-**

கன்னியாகுமரி மாவட்டம், அழகப்பாபுரம் பகுதியில் வசித்து வரும் இராபர்ட் டிசோதா, என்பவர் 14 ந் தேதியன்றுஅதிகாலை, சென்னைக்கு வந்து, பாரிமுனை, கடற்கரை சாலை நடராஜா ஹோட்டல் அருகே, அவரது பையை தலைக்கு வைத்து தூங்கி கொண்டிருந்த போது, சுமார் 5 நபர்கள், இராபர்ட் டிசோதாவை எழுப்பி கத்தியை காட்டி மிரட்டி அவர் வைத்திருந்த பை, பணத்துடன் கூடிய பர்ஸ், கைக்கடிகாரம் மற்றும் செல்போனை பறித்து கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து இராபர்ட் டிசோதா, வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். வடக்கு கடற்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.ஜோசப், 2.பாலு (எ) பரட்டை பாலு, 3.விக்னேஷ்குமார், 4.சஞ்சய், ஆகிய நான்கு பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் பை, 1 கைக்கடிகாரம் மற்றும் பணம் ரூ.500/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் ஜோசப் மீது 7 குற்ற வழக்குகளும், விக்னேஷ்குமார் மீது ஒரு குற்ற வழக்கும், சஞ்சய் மீது 2 குற்ற வழக்குகளும், பாலு (எ) பரட்டை பாலு மீது 7 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்,கைது செய்யப்பட்ட நான்கு எதிரிகளும் விசாரணைக்கு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# மயிலாப்பூர் பகுதியில் குட்கா பாக்கெட்டுகளை விற்பனை செய்த வழக்கில் மூவர் கைது

**சென்னை ஜூலை 16-**

சென்னை மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் மயிலாப்பூர், ஆதம் தெருவில் உள்ள ஒரு பெட்டிக்கடையில் சோதனை செய்தபோது, அங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், சட்டவிரோதமாக குட்கா பாக்கெட்டுகள் வைத்திருந்த பிரபாகரன், என்ற நபரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். அவரிடமிருந்து ஹான்ஸ், கூலிப், விமல், டொபாக்கோ, ரெமோ, பான் மசாலா உள்ளிட்ட 8 கிலோ எடை கொண்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் மேற்படி எதிரி பிரபாகரன், அவரது நண்பரிடமிருந்து குட்கா புகையிலை பாக்கெட்டுகளை வாங்கி, பெட்டிக்கடையில் வைத்து விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. பிரபாகரன் அளித்த தகவலின் பேரில் மணி, என்பவரையும் குட்காவுடன் கைது செய்தனர்.

மேலும் மேற்படி இருவருக்கும் குட்கா சப்ளை செய்த தங்கமாரியப்பன், வ/34, த/பெ.மாடசாமி, வேம்புலி அம்மன் கோயில் தெரு, ஜமீன் பல்லாவரம் என்பவரை கைது செய்தனர். குடோனில் பதுக்கி வைத்திருந்த சுமார் 390 கிலோ குட்கா புகையிலைப்பொருட்கள் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. எதிரிகளின் வங்கி கணக்குகளை முடக்கவும், விற்பனை செய்த கடை மற்றும் மறைத்து வைத்திருந்த கட்டிடத்தை முடக்க உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு குற்றவாளிகளை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

# ஷேர் ஆட்டோ ஓட்டுநரிடம் பணம் பறிப்பு: ஒருவர் கைது

**சென்னை ஜூலை 16-**

சென்னை, பாடி பகுதியைச்சேர்ந்த விஜயகுமார், என்பவர் ஷேர் ஆட்டோவை வாடகைக்கு எடுத்து ஓட்டி வருகிறார். இவர் கடந்த 11.ந் தேதி அன்று இரவு சவாரியை முடித்துவிட்டு, அம்பத்தூர் எஸ்டேட் ரோடு, ரவுண்ட் பில்டிங் அருகே நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த நபர் ஒருவர் மேற்படி விஜயகுமாரை மிரட்டி ரூ.1,000/- பறித்துள்ளார்.

மேலும் கிழே கிடந்த கல்லை எடுத்து ஆட்டோவின் முன்பக்க கண்ணாடியை உடைத்து சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து ஷேர் ஆட்டோ உரிமையாளர் துரை என்பவர் ஜெ.ஜெ.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.ஜெ.ஜெ.நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழிப்பறி வழக்கில் தொடர்புடைய வின்சென்ட், அரும்பாக்கம், சென்னை என்பவரை கைது செய்தனர்.

# ரூ.17.50 லட்சம் பெற்று போலி பணி நியமன ஆணைகளை கொடுத்து மோசடி வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை ஜூலை 16-**

சென்னை, பிராட்வே, அப்பாராவ் கார்டன், பகுதியில் ஜெய்சங்கர், என்பவர் வசித்து வருகிறார். ஜெயசங்கர் அவரது உறவினர்கள் இருவருக்கு தலைமைச்செயலகத்தில் கம்பியூட்டர் அப்ரேட்டர் அரசு வேலை வேண்டி, அறிமுகமான ஓட்டேரி பகுதியைச்சேர்ந்த முத்துராமன் மற்றும் அவரது மனைவி உஷாராணி ஆகியோரிடம் கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் ரூ.17.50 லட்சம் பணம் கொடுத்துள்ளார்.

பணத்தை பெற்றுக்கொண்ட முத்துராமன் 2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரசு வேலைக்கான பணி நியமன உத்தரவை ஜெய்சங்கரிடம் கொடுத்துள்ளார். ஜெய்சங்கர் அரசு வேலைக்கான உத்தரவை சரிபார்த்த போது அது போலியானது என தெரியவந்தது. இது குறித்து ஜெய்சங்கர் முத்தியால்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட முத்துராமன் என்ற நபரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.துறை முகம் உதவி கமிஷ்னர் பி.ராஜசேகரன் முத்தியால்பேட்டை குற்றப்பிரிவு ஆய்வாளர் ஆகியோர் தலைமையிலான போலிசார் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு குற்றவாளி மகேஷ், என்பவரை கைது செய்தனர். எதிரியிடமிருந்து போலி பணிநியமன ஆணை பறிமுதல் செய்யப்பட்டது.

# ஆட்டோவில் பயணி தவறவிட்ட 8 சவரன் தங்க நகைகள் மற்றும் 2 பட்டு புடவைகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுநர்

**சென்னை ஜூலை 16-**

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, சோலையப்பன் தெருவைச் சேர்ந்த சரவணன், என்பவர் ஓலா மூலம் ஆட்டோ ஓட்டி வருகிறார். சரவணன் 13. ந் தேதி அன்று நண்பகல், வண்ணாரப்பேட்டை, கப்பல் போலு தெருவில் இருந்து ஒரு தாய் மற்றும் மகளை சவாரியாக ஏற்றிச் சென்று புரசைவாக்கத்தில் இறக்கிவிட்டுள்ளார்.

சரவணன் சில மணி நேரம் கழித்து பார்த்தபோது, அவரது ஆட்டோவில் யாரோ பயணி ஒரு பையை மறந்துவிட்டு சென்றதும், பையை திறந்து பார்த்தபோது, அதில் 2 பட்டு புடவைகள், 8 சவரன் கொண்ட 2 தங்க நகைகள் இருந்ததும், சரவணன் மேற்படி தங்க நகைகள் மற்றும் பட்டு புடவைகள் அடங்கிய பையை தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார் இந்நிலையில், காவல்துறையின் நடவடிக்கையால், விவரங்கள் பெற்று, வண்ணாரப்பேட்டையில் இருந்து சவாரியாக சென்ற பழனிசெல்வி மற்றும் அவரது மகள் கைபேசி எண் பெற்று கைபேசியில் விசாரிக்க, தாங்கள் ஆட்டோவில் பயணித்தபோது, ஆட்டோவில் தங்க நகைகள் மற்றும் பட்டு புடவைகள் அடங்கிய பையை மறந்து வைத்துவிட்டதாக தெரிவித்தனர். பயணி பழனிசெல்வி, ஆட்டோ ஓட்டுநர் சரவணன் ஆகியோரை வரவழைத்து, பழனிசெல்வி கூறிய அடையாளங்களை சரி பார்த்து, தவறவிட்ட பை, பழனிசெல்வியின் பை என உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், தங்க நகைகள் மற்றும் 2 பட்டு புடவைகள் அடங்கிய பை, ஒப்படைக்கப்பட்டது.

# நந்தா பொறியியல் கல்லூரிக்கு உயர்தர சான்றிதழ் அந்தஸ்து



ஈரோடு ஜூலை 16-

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் மத்திய அரசு கல்வி அமைச்சத்தின் வழிக்காட்டுதல்படி ஈரோடு பீராந்தியத்திற்கான "சுவயம்-என்.பி.டி.டீ.எல்" ஆன்லைன் படிப்பிற்கான மையம் செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தின் மூலம் நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் மாத காலங்களில் 1748 க்கும் மேற்பட்ட மாணவர்களும், பேராசிரியர்களும் ஐஐடி கள் மூலம் நடத்தப்படும் வெவ்வேறான பாடங்களை தேர்வு செய்து படிப்பினை மேற்கொண்டார்கள்.

இறுதியில் நடத்தப்பட்ட பருவத் தேர்வில் தங்கம், வெள்ளி, எலைட் போன்ற "கிரேடுகள்" முறையில் மாணவர்களும், பேராசிரியர்களும் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றிப் பெற்று சாதனைப் படைத்தார்கள்.

மேலும் 7233 க்கும் மேற்பட்ட பிராந்தியங்களில் நடத்தப்பட்ட இத்தேர்வில் முதல் 200 இடங்களைத் தக்க வைத்துக் கொண்ட "சுவயம்-என்.பி.டி.ஈ.எல்" ஆன்லைன் படிப்பிற்கான மையங்களில் ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரி 113 வது இடத்தினை பெற்றும் சாதனைப்படைத்தது குறிப்பிடத்தக்கது.

திறம்பட செயல்பட்ட இத்தகைய சாதனைகளுக்கு சிறந்தொரு கற்றல் சூழலினை ஏற்படுத்திக் கொடுத்து "ஈரோடு பிராந்தியத்திற்கான சுவயம்-என்.பி.டி.ஈ.எல்" ஆன்லைன் படிப்பிற்கான மையம்" என்கிற முறையில் சென்னை ஐ.ஐ.டி வளாகத்தில் மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நந்தா பொறியியல் கல்லூரிக்கு "" தரச்சான்றிதழினை வழங்கி அங்கீகாரம் செய்து சிறப்பித்தது. இத்தகைய "ஏ" தரச்சான்றிதழினை பெறுவதற்கு உறுதுணையாக செயல்புரிந்த கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி மற்றும் மையத்தின் ஒருங்கிணைப்பாளரும். புலமுதல்வருமான முனைவர் ஈ.கே. மோகன் ராஜ் ஆகியோருக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி சண்முகன் தனது பாராட்டினை தெரிவித்தார்.

மேலும் "ஏ" தரச்சான்றிதழினை பெற உதவி புரிந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ். நந்தகுமார் பிரதீ நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் . எ திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே.வேலுசாமி ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து ஊக்கப்படுத்தினார்கள்.

# கொங்கு கல்வி நிலையத்தில் காமராஜர் பிறந்த நாள் விழா



ஈரோடு ஜூலை 16-

தமிழக முன்னாள் முதலமைச்சர் கர்மவீரர் காமராஜர் பிறந்த தினமான கல்வி வளர்ச்சி தினமாக ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனை கொண்டாடும் விதமாக ரங்கம்பாளையம் கொங்கு கல்வி நிலையம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல்போட்டிகள் நடத்தப்பட்டன. கர்மவீரர் காமராஜ் அவர்களின் சேவையை நாட்டிற்கு அர்ப்பணிப்பு அளித்ததையும், சமூகநீதி, கல்வியின் மேம்பாடு, மருத்துவம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவைகளை மாணவ, மாணவியர்கள் விழாவில் எடுத்துரைத்தனர். விழாவில் தாளாளர் கே.செல்வராஜ் மற்றும் முதல்வர் .டி. நதியா அரவிந்தன் விழாவில் கலந்து கொண்டு குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கி பாராட்டைத் தெரிவித்தனர்.

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக முன்னாள் முதலமைச்சர் காமராஜர் பிறந்தநாள் விழா

ஈரோடு ஜூலை 16-



ஈரோடு தந்தை பெரியார் தலைமை அரசு மருத்துவமனை எதிரே உள்ள பெருந்தலைவர் காமராஜ் திருவுருவ சிலைக்கு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.திருச்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில்துணைத்தலைவர் பா.ராஜேஸ் ராஜப்பா,ஈரோடு எஸ் கௌதமன் மாமன்ற உறுப்பினருமான ஈ பி ரவி, ,மண்டல தலைவர்களான ஆர்.விஜய் பாஸ்கர்,எச்.எம்.ஜாபர் சாதிக்,ஈரோடு மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி எம். ஞானதீபம், , ஊடகப் பிரிவுமுகமது ஹர்ஷத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே என் பாஷா, மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டனர்

# ஈரோடு மாவட்ட அணைகளின் நிலவரம்

ஈரோடு, ஜூலை.15 -

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக நீர்ப்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வந்ததால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது. நீலகிரி, கோவை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதனை எதிரொலியாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 96.17 அடியாக உயர்ந்து உள்ளது. நேற்று காலை அணைக்கு 1,216 கன அடியாக நீர் வந்து கொண்டிருக்கிறது. பவானிசாகர் அணையில் இருந்து குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடி நீரும், தடப்பள்ளி -அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடியும், காலிங்கராயன் பாசனத்திற்கு 450 கன அடியும், கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 5 கன அடி நீரும் என மொத்தம் 1,355 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் அதிகரித்து வந்தாலும் மற்ற அணைகள் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 25.15 அடியாக உள்ளது. இதே போல் வரட்டுபள்ளம் அணையின் நீர்மட்டம் 22.31 அடியாக சரிந்து உள்ளது. 30 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 14.70 அடியாக சரிந்து உள்ளது. ஒருபுறம் பவானி சாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தாலும் மறுபுறம் மற்ற அணைகளின் நீர் மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால் வேதனை அடைந்துள்ளனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**மழைநீர் உயிர்நீர்**

ஈரோடு மாவட்டத்தில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அரசு நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்

ஈரோடு,ஜூலை.16-



தமிழ்நாடு முதலமைச்சர் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, பவானி மெயின் ரோடு, பிளாட்டினம் மஹாலில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். மேலும், பொதுமக்களது கோரிக்கைகள் முழுமையாக முறையாக கேட்கப்பட்டு விரைவாக தீர்வு வழங்க வேண்டும் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். இன்றைய தினம் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 340 முகாம்கள் நடைபெற உள்ளது. இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட உள்ளது. மேலும், இம்முகாமில் இடம்பெறாத துறை சார்ந்த மனுக்களை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மனுக்களை பெற்றிடவும் தனியாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது, "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்டத்தின் கீழ் 1 மணி நேரத்தில் சுமார் 300 மனுக்களும், மகளிர் உரிமைத்தொகை வழங்க வேண்டி 100 மனுக்களும் பெறப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் சுமார் 1 கோடி மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். தற்போது 1 கோடியே 15 இலட்சம் மகளிருக்கு இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பெண்கள் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்திட விடியல் பயணம், குழந்தைகளுக்கு பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், ஏழை, எளிய மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவித்திட மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களை செயல்படுத்தினார்கள். மேலும், உங்களுடன் முதல்வர் திட்டத்தை செயல்படுத்தி முகாம்கள் நடத்தி ஈரோடு மாவட்டத்தில் ஏறத்தாழ 10,000 மனுக்கள் பெறப்பட்டு, 4,000 மனுக்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. 3,600 மனுக்கள் பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள சில மனுக்கள் உரிய ஆவணங்கள் வேண்டி நிலுவையில் உள்ளது. இன்றைய தினம் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களில் தீர்வு வழங்கப்பட உள்ளது. மேலும், முகாமில் பெறப்படும் சில மனுக்களுக்கு உடனடி தீர்வுகளும் வழங்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டம் முழுவதும் இம்முகாம்கள் நடைபெற தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் 2 வார்டுகளில் மட்டும் சுமார் 1,500 மனுக்கள் பொதுமக்கள் வழங்குவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இம்மனுக்களில் சுமார் 400 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு வழங்கப்பட உள்ளது.

மேலும், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு நேரடியாக சென்று முகாம் குறித்து தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கி உள்ளார்கள். பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய தினம் ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, பவானி மெயின் ரோடு, பிளாட்டினம் மஹால், பவானி நகராட்சி, வன்னியர் திருமண மண்டபம், அரச்சலூர் பேரூராட்சி, ஓடாநிலை, சமுதாயக்கூடம், கிளாம்பாடி பேரூராட்சி, கருமாண்டாம் பாளையம் கொங்கு திருமண மண்டபம், அம்மாபேட்டை வட்டாரம், பட்லூர் ஊராட்சி, பொம்மன்பட்டி சமுதாய கூடம் மற்றும் கோபிசெட்டி பாளையம் வட்டாரம், மொடச்சூர் ஊராட்சி, வேட்டைக்காரன் கோவில் ஸ்ரீ வாசு சென்னியப்பா திருமண மண்டபம் ஆகிய இடங்களில் முகாம்கள் நடைபெற்று வருகிறது. இம்முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி பயன் பெற வேண்டும் என தெரிவித்தார். தொடர்ந்து, அரச்சலூர் பேரூராட்சி, ஓடாநிலை, சமுதாயக்கூடம் மற்றும் கொடுமுடி வட்டம், கிளாம்பாடி பேரூராட்சி, கருமாண்டாம் பாளையம் கொங்கு திருமண மண்டபம் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமை பார்வையிட்டார். மேலும், அரசு த்துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இம்முகாம்களில் கூட்டுறவுத்துறை சார்பில் 5 மகளிர் சுய உதவிக்குழுக்களை சார்ந்த சுமார் 45 நபர்களுக்கு ரூ.24.00 இலட்சம் கடனுதவி, தாட்கோ சார்பில் 6 தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அட்டைகள், தோட்டக்கலை துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு பழச்செடிகள் தொகுப்பு மற்றும் காய்கறி விதை தொகுப்பு, 2 பயனாளிகளுக்கு குடும்ப அட்டையில் திருத்தம் ஆணை என மொத்தம் 57 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து, அரச்சலூர் ஜெயராம்பாக்கில் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படை தளபதி மாவீரன் பொல்லான் அவர்களுக்கு முழு உருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, உரிய காலத்தில் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின், துணை மேயர் வே.செல்வராஜ், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.காஞ்சன் சௌதரி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், மண்டல குழுத்தலைவர்கள் பி.கே.பழனிச்சாமி, சசிக்குமார், தண்டாபாணி, சுப்பிரமணி, துணை ஆணையர் கு.தனலட்சுமி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள்: அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் பெற்றார்

ஊட்டி,ஜூலை.16-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வாண்டையார் திருமண மண்டபத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்'; திட்ட முகாம் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடிய நிகழ்ச்சியினை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகிளாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்'; திட்ட முகாமில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ;, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில், அரசு தலைமை கொறடர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதன்படி அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தினை, தமிழ்நாடு முதலமைச்சர் , இன்றைய தினம், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வாண்டையார் திருமண மண்டபத்தில் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். அதனை தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. நமது மாவட்டத்திலும் இன்றைய தினம் 6 இடங்களில் முகாம்கள் நடைபெற்று வருகிறது. இதில் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகிளாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் நானும், கலெக்டர் மற்றும் பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டு நடைபெற்று வரும் முகாமினை பார்வையிட்டோம். இம்முகாமில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களை அழைத்து செல்ல ஏதுவாக சக்கர நாற்காலி, காவல் துறை மூலம் ஆயுலு ஐ ர்நு டுP லுமுரு (உதவி மையம்), பதிவு செய்யும் இடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளைய தினம் 16.07.2025 உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டுகளுக்கான முகாம் சுங்கம் சி.எஸ்.ஐ சமுதாய கூடத்திலும், குன்னூர் வட்டம் பர்லியார் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் கோடமலை சமுதாய கூடத்திலும், கோத்தகிரி வட்டம், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் சோலூர் மட்டம் ஊராட்சி அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

மேலும், 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. நமது மாவட்டத்தில் 5 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள், 35 கிராம ஊராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் உள்ள பொதுமக்களும் பயன்பெறும் வகையில், நகர்ப்புற பகுதிகளில் 65 முகாம்களும், ஊரக பகுதியில் 81 முகாம்களும் என மொத்தம் 146 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. முதற்கட்டமாக 67 முகாம்களும், இரண்டாம் கட்டமாக 16.08.2025 முதல் 14.09.2025 வரை 42 முகாம்களும், மூன்றாம் கட்டமாக 15.09.2025 முதல் 14.10.2025 வரை 37 முகாம்களும் நடைபெற உள்ளது.

இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தி துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை போன்ற 13 துறைகள் மூலமாகவும் பல்வேறு வகையான 45 சேவைகள் வழங்கப்படுகிறது. இன்று விண்ணப்பம் அளித்த பொதுமக்களின் கோரிக்கைகள் 45 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

**தலைகவசம் உயிர் கவசம்**

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம் - 7
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மொத்த தொகை ஒப்பந்த முறை (இரு உறை முறை)

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்: 19/2025–2026/க.பொ/க(க&ப) வட்டம் / சேலம் / நாள்: 15.07.2025**

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் - 7 அவர்களால், பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு இணைய வழி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறை முறையில் வரவேற்கப்படுகின்றன. மின்னணு ஒப்பந்தப்புள்ளியை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் 17.07.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 24.07.2025 பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய வழி மூலம் https://tntenders.gov.in -ல் பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 24.07.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணையவழி மூலம் https://tntenders.gov.in -ல் பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 24.07.2025–ல் பிற்பகல் 3.30 மணிக்கு இணைய வழி மூலம் https://tntenders.gov.in-ல் திறக்கப்படும்.

| வ. எண். | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ) | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| 1. | தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி கட்டடம் கட்டும் பணி | 510.00 | 2,65,000 | 240 நாட்கள் |
| 2. | தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி கட்டடம் கட்டும் பணி | 523.00 | 2,72,000 | 240 நாட்கள் |

ஒப்பந்ததாரர் வகுப்பு : பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாரராக வகுப்பு-II ல் மாநில அளவில்/இவ்வட்ட அளவில் (ரூ.5.00 கோடி முதல் ரூ.10.00 கோடி வரை) மற்றும் அதற்குமேல்.
முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் : முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம்.
பணிகளின் பெயர், முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையத்தளத்திலும் https://tntenders.gov.in தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அதுபற்றிய விவரம் வலைத்தளம் https://tntenders.gov.in -ல் பதிவேற்றம் செய்யப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (க&ப) வட்டம், சேலம் – 7.
செ.ம.தொ.இ/3640/ஒப்பந்தப்புள்ளி/2025

**ENROLLMENT NOTICE**
After 10 days of the publication of this notice and within THREE months thereafter.I, SUDHAKAR.D, S/o. DHAYALAN, Aged 34years, Permanently residing at, NO-24, SUBRAMANIAM STREET, VIVEKANANDA NAGAR, AVADI TIRUVALLUR- 600054.Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu, Bar Council Buildings High Court Campus , Chennai - 104. Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.
SUDHAKAR.D

**ENROLLMENT NOTICE**
After 10 days of the publication of this notice and within three months thereafterI, V.BHASKARAN, S/O. S. VADIVELU, aged 61 years, permanently residing at Plot No.339, Second Street, Srinivasa Nagar, Kaliyanur Kandigai, Via Sevalaiya, Pakkam Post, Tirunindravur, Tiruvallur District -602 024, Tamilnadu.Intend to have my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.
V.BHASKARAN

**ENROLLMENT NOTICE**
After 10 days of the publication of this notice and within Three months thereafter. I, Arshad Saleem, S/O: Abdul Saleem, Aged: 23 years Permanently residing at, No.85/16,Srirangam Avenue, Egmore, Tamil Nadu , Chennai-600008. Intend to have my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai - 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.
Arshad Saleem

**ENROLLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within three months thereafter I, M.HARI KRISHNAN S/O N.MANIVANNAN., AGED 23 YEARS, D.O.B 13/09/2001 and Permanently Residing at No:12/32, Blue Heaven apartments, Sundara Vinayagar Kovil 2nd Street, Perambur, Chennai 600011. intend having my enrollment an Advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar council Building, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days
M. HARI KRISHNAN

**ENROLLMENT NOTICE**
After 10 days of the publication of this notice and within five months thereafter I, RAJESWARAN S , S/O Sarvesvaran , age-23, Permanently residing at, No.14, AGS Colony 4th cross street extension Velachery , Chennai Pin code -600042,
Intend having my enrollment as an Advocate moved before the Bar Council Of Tamil Nadu Bar Council Building, High Court Campus, Chennai - 600104. Those who have any valid objections may notify the same to the Bar Council Within 10 days.
S .Rajeswaran

மாண்புமிகு 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், மதுரை.
I.A.No: 135 / 2023 in
I.A.No: 400 / 2012 in
M.C.O.P.No: 581 / 2007
கலாதேவி, க/பெ.மனோஜ்,
1150, காமராஜர் தெரு,
அலங்காநல்லூர் அஞ்சல்.
மதுரை மாவட்டம்.
--- மனுதாரர்/மனுதாரர்/மனுதாரர்
--- எதிரிடை ---
ஹேமாவதி, க/பெ.J.சேகர்,
44, 200 மீட் ரோடு, திருமலை நகர்,
கொளத்தூர், சென்னை.
--- 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுவில் மனுதாரரின் கணவர் சாலை விபத்தில் காலமாகிவிட்டார். அதற்கு நஷ்ட ஈடு கோரி சமூகம் கோர்ட்டில் மனுதாரர் மனு தாக்கல் செய்து இருந்தார். மேற்படி அசல் மனு தள்ளுபடியானதால் அதனை Restore செய்ய மனு செய்து இருக்கிறார். ஆட்சேபணை ஏதும் இருந்தால் 06.08.2025-ம் வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் மனுதாரருக்கு ஆதரவாக 1-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகி விடும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
R.ராஜா,
வழக்கறிஞர், மதுரை.

BEFORE THE HON'BLE SUBORDINATE COURT AT POONAMALLEE
E.P.No.70 OF 2024 IN
Arbitration Case No : D239/11
M/s. Cholamandalam Investment and Finance Company Ltd.,
Rep by its Area Legal Manager,
Mr. K.Balaji, S/o. Krishnan.V
Dare House, 1st Floor, 2 N.S.C.Bose Road, Parrys, Chennai-600 001.
... Petitioner/Claimant
-Vs-
SATHYASEELAN & Another
... Respondents/ Respondents
To
JD-1 Sathyaseelan
S/o. B.Kathirkama Sundari
2, Ramalingam 5th Cross Street,
Gandhi Nagar Near Meenakshi Theatre,
Avadi, Chennai, Tamilnadu - 600054
The above E.P. No.70 of 2024 filed by the petitioner against you for Attachment of Arrest for a sum of Rs.731034 /- together with interest for non satisfaction of award amount. The above matter came up on 23.06.2025 before the Hon'ble Subordinate Court At Poonamallee was pleased to order to notice to you by way of Paper publication returnable by 03.09.2025. You are hereby given notice to appear before the Subordinate Court At Poonamallee on 03.09.2025 at 10.30 a.m in person or through your pleader without fail otherwise the matter will be decided ex-parte.
M/s. T. MUTHAMILSELVI M.A.,M.L.,
Counsel for Petitioner

BEFORE THE HON'BLE SUBORDINATE COURT AT POONAMALLEE
E.P.No.68 OF 2024 IN
C.P.NO : KSG/CHOLA/549/10
M/s. Cholamandalam Investment and Finance Company Ltd.,
Rep by its Shortfall Collection Executive,
Mr. K.R.Vignesh PN, S/o.Nagesh PM,
Dare House, No.2, N.S.C.Bose Road,
Parrys, Chennai-600 001.
... Petitioner/Claimant
-Vs-
V.Palani & Another
... Respondents/ Respondents
To
1. V.Palani, S/o. R.Velayutham,
No.8, Nehru Street, Konambedu,
Thiruverkadu (Post), Thiruvallur
Tamilnadu – 600077
2 .D.Rajendran, T.Duraikannu,
No.6, Rajeevgandhi Nagar,
Konambedu, Thiruverkadu (Post),
Thiruvallur, Tamilnadu – 600077
... Respondents / Respondents
The above E.P. No.68 of 2024 filed by the petitioner against you for Arrest for a sum of Rs.393326 /- together with interest for non satisfaction of award amount. The above matter came up on 14.07.2025 before the Hon'ble Subordinate Court At Poonamallee was pleased to order to notice to you by way of Paper publication returnable by 24.09.2025. You are hereby given notice to appear before the Subordinate Court At Poonamallee on 24.09.2025 at 10.30 a.m in person or through your pleader without fail otherwise the matter will be decided as ex-parte.
M/s. T. MUTHAMILSELVI M.A.,M.L.,
Counsel for Petitioner

## 4-வது டெஸ்ட் போட்டியில்
# பும்ரா, ரிஷப் பண்ட் விலகல்..? கேப்டன் சுப்மன் கில் பதில்




**லண்டன், ஜூலை 16-**
4வது டெஸ்ட் போட்டி; பும்ரா, ரிஷப் பண்ட் விளையாடுவார்களா என்பது குறித்து சுப்மன் கில் பதிலளித்துள்ளார்.

**தொடர் சமன்...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் இருந்தது.

**192 ரன்னில்...**
இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி கடந்த 10-ம் தேதி லண்டன் லார்ட்சில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் இரு அணிகளும் தலா 387 ரன்கள் எடுத்து ஆல்-அவுட் ஆகின. பின்னர் 2-வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 62.1 ஓவர்களில் 192 ரன்னில் சுருண்டது. அதிகபட்சமாக ஜோ ரூட் 40 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டும், பும்ரா, முகமது சிராஜ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

**இங்கி. வெற்றி...**
இதன் மூலம் இந்தியாவுக்கு 193 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 74.5 ஓவர்களில் 170 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இங்கிலாந்து 22 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தனி ஆளாக போராடிய ஜடேஜா 61 ரன்களுடன் இறுதிவரை களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஆர்ச்சர், ஸ்டோக்ஸ் தலா 3 விக்கெட்டுகளும், பிரைடன் கார்ஸ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

**முன்னிலை...**
இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4-வது போட்டி 23-ம் தேதி மான்செஸ்டரில் நடைபெற உள்ளது. இந்நிலையில், 4வது டெஸ்ட் போட்டியில் பும்ரா, ரிஷப் பண்ட் விளையாடுவார்களா என்ற கேள்விக்கு கேப்டன் கில் பதில் அளித்துள்ளார்.

**குழப்பம் இல்லை...**
இது தொடர்பாக அவர் கூறியதாவது, ரிஷப் பண்ட் காயம் குறித்து ஸ்கேன் பரிசோதனை செய்து கொண்டார். அதில் எந்த ஒரு அபாயமும் இல்லை என தெரிகிறது. இதனால் பண்ட் அடுத்த டெஸ்ட் போட்டியில் விளையாடுவதில் எந்த ஒரு குழப்பமும் இருக்காது என நம்புகிறேன்.

**விரைவில்...**
பும்ராவின் உடல் தகுதியை கருத்தில் கொண்டு அவர் இந்த டெஸ்ட் தொடரில் மூன்று போட்டியில் தான் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய பும்ரா இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஓய்வு எடுத்துக் கொண்டு மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கு திரும்பினார். இந்த நிலையில் நான்காவது டெஸ்ட் போட்டிக்கு அவர் திரும்புவாரா இல்லையா என்பது குறித்து உங்களுக்கு விரைவில் தெரியவரும். இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தியாவுக்கு எதிரான 4-வது டெஸ்ட்:
# இங்கிலாந்து அணி அறிவிப்பு

**லண்டன், ஜூலை 16-**
இந்தியாவுக்கு எதிரான 4-வது டெஸ்ட் போட்டியில் விளையாடும் இங்கிலாந்து அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

**முன்னிலை...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4-வது போட்டி மான்செஸ்டரில் வரும் 23-ம் தேதி தொடங்க உள்ளது.

**காயம்...**
இந்நிலையில் இந்த போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக இந்த தொடரின் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகிய சோயிப் பஷீருக்கு மாற்றுவீரராக லியாம் டாசன் இங்கிலாந்து அணியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

**அணி விவரம்...**
பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஜோப்ரா ஆர்ச்சர், கஸ் அட்கின்சன், ஜேக்கப் பெத்தேல், ஹாரி புரூக், பிரைடன் கார்ஸ், ஜாக் கிராவ்லி, லியாம் டாசன், பென் டக்கெட், ஒலி போப், ஜோ ரூட், ஜேமி ஸ்மித், ஜோஷ் டாங், கிறிஸ் வோக்ஸ்.

# லார்ட்ஸ் டெஸ்ட்: இந்திய அணியின் போராட்டத்துக்கு சச்சின் பாராட்டு

**லண்டன், ஜூலை 16-**
லார்ட்ஸ் டெஸ்ட்: இறுதிவரை போராடிய இந்திய அணிக்கு சச்சின் டெண்டுல்கர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சுற்றுப்பயணம்...
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் இருந்தது.

**தலா 387 ரன்கள்...**
இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி கடந்த 10-ம் தேதி லண்டன் லார்ட்சில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் இரு அணிகளும் தலா 387 ரன்கள் எடுத்து ஆல்-அவுட் ஆகின. பின்னர் 2-வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 62.1 ஓவர்களில் 192 ரன்னில் சுருண்டது. அதிகபட்சமாக ஜோ ரூட் 40 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டும், பும்ரா, முகமது சிராஜ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

**இங்கிலாந்து வெற்றி...**
இதன் மூலம் இந்தியாவுக்கு 193 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 74.5 ஓவர்களில் 170 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இங்கிலாந்து 22 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தனி ஆளாக போராடிய ஜடேஜா 61 ரன்களுடன் இறுதிவரை களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஆர்ச்சர், ஸ்டோக்ஸ் தலா 3 விக்கெட்டுகளும், பிரைடன் கார்ஸ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

**சச்சின் பாராட்டு...**
இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4-வது போட்டி 23-ம் தேதி மான்செஸ்டரில் நடைபெற உள்ளது. இந்நிலையில், லார்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் வெற்றிக்காக இறுதி வரை போராடிய இந்திய அணியை சச்சின் டெண்டுல்கர் பாராட்டி உள்ளார்

**கடுமையாக முயற்சி...**
இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், வெற்றிக்கு மிக அருகில் வந்து விட்டோம். ஜடேஜா, பும்ரா, சிராஜ் இறுதி வரை போராடினார்கள். நன்றாக முயற்சித்தார்கள். இந்திய அணி வெற்றிக்காக கடுமையாக முயற்சி செய்தது. இங்கிலாந்து சிறப்பாக பந்து வீசி அழுத்தத்தை கொடுத்து, அவர்கள் விரும்பிய முடிவை ஏற்படுத்திக் கொண்டனர். கடுமையாகப் போராடி வென்றதற்கு வாழ்த்துக்கள். இவ்வாறு அதில் பதிவிடப்பட்டுள்ளது.

# மே.இ.தீவுகள் மோசமான சாதனை

**சபினா பார்க், ஜூலை 16-**
வெஸ்ட் இண்டீஸ் - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான 3-வது டெஸ்ட் போட்டி பகலிரவு ஆட்டமாக ஜமைக்காவில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 225 ரன்களில் ஆல் அவுட்டான நிலையில், வெஸ்ட் இண்டீஸ் அணி முதல் இன்னிங்ஸில் 143 ரன்களை மட்டுமே எடுத்து ஆல் அவுட்டானது. இதன்மூலம் ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 80 ரன்கள் முன்னிலைப் பெற்றது.

**202 ரன்கள் இலக்கு...**
பின்னர் 2-வது இன்னிங்சில் ஆஸ்திரேலிய அணி 121 ரன்களில் ஆல் அவுட்டாகி 202 ரன்கள் என்ற இலக்கை நிர்ணயித்தது. இதையடுத்து இலக்கை நோக்கி விளையாடிய வெஸ்ட் இண்டீஸ் அணி வெறும் 27 ரன்களில் ஆல் அவுட்டானதுடன் 176 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வியைச் சந்தித்தது. ஆஸ்திரேலிய அணி தரப்பில் அபாரமான பந்துவீச்சை வெளிப்படுத்திய மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஏற்கனவே 2 டெஸ்ட் போட்டிகளையும் வென்றுள்ள ஆஸ்திரேலியா அணி 3 ஆவது டெஸ்ட் போட்டியையும் வென்று 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3- 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

**மிகக் குறைந்த ஸ்கோர்...**
இந்நிலையில் இப்போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி 2-வது இன்னிங்சில் 14.3 ஓவர்களை மட்டுமே எதிர்கொண்டு வெறும் 27 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன்மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்சில் மிகக் குறைந்த ஸ்கோரைப் பதிவுசெய்த 2-வது அணி எனும் மோசமான சாதனையை வெஸ்ட் இண்டீஸ் அணி படைத்துள்ளது. இதற்கு முன் கடந்த 1955-ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக நியூசிலாந்து அணி 26 ரன்களுக்கு ஆல் அவுடானதே மோசமான சாதனையக இருந்து வருகிறது.

**தென் ஆப்பிரிக்க அணி...**
இதற்கடுத்த மூன்று குறைந்தபட்ச ஸ்கோரை தென் ஆப்பிரிக்க அணி பதிவுசெய்துள்ளது. அதன்படி அந்த அணி 1896-ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக 30 ரன்களிலும், 1924-ம் ஆண்டு 30 ரன்னிலும், 1899-ம் ஆண்டு 35 ரன்களிலும் என ஒரு இன்னிங்சில் ஆல் அவுட்டானது குறிப்பிடத்தக்கது.

## நிபா வைரஸ் பரவல் எதிரொலி:
# தமிழக எல்லைகளில் அலர்ட்

**சென்னை, ஜூலை 16-**
கேரளாவில் நிபா வைரஸ் தொற்றுக்கு 2 பேர் பலியானதையடுத்து நீலகிரி மாவட்ட தமிழக - கேரள எல்லைகளில் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

கேரளாவில் கோழிக்கோடு, மலப்புரம் உள்ளிட்ட இடங்களில் நிபா வைரஸ் பரவல் இருந்து வருகிறது. இதில் உயிரிழப்பும் ஏற்பட்டு வருகிறது. இந்த சூழ்நிலையில் பாலக்காடு மாவட்டம் மன்னார்காடு அருகே குமரமபுத்தூர் பகுதியை சேர்ந்தவர் 58 வயது நபர். இவர், கடந்த சில நாட்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். இதற்காக அப்பகுதியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், அவருக்கு குணமாகவில்லை. இதையடுத்து அவர், மலப்புரம் மாவட்டம் பெரிந்தல்மன்னா அருகே உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆனால் உடல்நிலை மிகவும் மோசமானதால் அவர் மஞ்சேரியில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்தநிலையில் சில தினங்களுக்கு முன் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். கேரளாவில் நிபா வைரஸுக்கு 2 பேர் பலியாகி உள்ளனர். இதையடுத்து மாநில சுகாதாரத்துறை நிபா பரவல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், கேரளாவில் நிபா வைரஸ் தொற்றுக்கு 2 பேர் பலியானதையடுத்து நீலகிரி மாவட்ட தமிழக - கேரள எல்லைகளில் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது. நாடுகாணி, தாளூர் உள்ளிட்ட 8 சோதனை சாவடிகளில் சுகாதார பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கேரளாவில் இருந்து வரும் அனைவருக்கும் உடல் வெப்ப பரிசோதனை, நிபா வைரஸ் குறித்து விழிப்புணர்வோடு இருக்க அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

# எழுதிக் கொடுத்த வசனத்தை வாசித்துவிட்டு செல்கிறார் விஜய்
## சபாநாயகர் அப்பாவு விமர்சனம்

**நெல்லை, ஜூலை 16-**
எழுதிக் கொடுத்த வசனத்தை விஜய் வாசித்துவிட்டு செல்கிறார் என சபாநாயகர் அப்பாவு விமர்சனம் செய்துள்ளார்.

நெல்லையில் சபாநாயகர் அப்பாவு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: சாத்தான்குளம் சம்பவத்தில் வழக்கு பதிவு செய்யவே அப்போதய அரசு தயங்கியது. ஆனால் திருப்புவனம் விவகாரத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. சாத்தான்குளம் சம்பவத்தில் உயிரிழந்தது யார் என்பதே ஆர்ப்பாட்டத்தில் பேசிய அந்த அரசியல் கட்சி தலைவருக்கு தெரியவில்லை.

எழுதிக்கொடுத்த வசனத்தை வாசித்துவிட்டு செல்கிறார் விஜய். இவரது வீட்டில் வருமானவரித்துறை சோதனை நடந்த போது பாண்டிச்சேரியை சேர்ந்த புஸ்சி ஆனந்த் நேரில் சென்று அமித்ஷாவிடம் பேசி அதனை சரி செய்து வைத்தார். வருமான வரி சோதனை நடத்திய அதிகாரி அருண்ராஜுக்கு பதவி வழங்கப்படுகின்றது. வருமான வரி சோதனையை சரிசெய்த புஸ்சி ஆனந்திற்கு பொதுச்செயலாளர் பதவி கொடுக்கப்படுகிறது. யார் சொல்லி இந்த போராட்டம் நடத்தினார் என்பது தெரியவில்லை. பா.ஜ.க. அமித்ஷா பின்னால் விஜய் இருப்பதாக பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்று வருகிறது. விஜயின் தாயார் சிறுபான்மையினர் பிரிவை சேர்ந்தவர் என்பதால் சிறுபான்மை வாக்குகளை பிரிப்பதற்காக அவரை களத்தில் இறக்கி உள்ளதாக தோன்றுகிறது'' என்றார்.

# செஸ்: வைஷாலி முன்னேற்றம்

பிடே உலக கோப்பை மகளிர் செஸ் போட்டி ஜார்ஜியாவில் உள்ள படுமி நகரில் நடைபெற்று வருகிறது. 29-ந் தேதி வரை நடை பெறும் இந்தப் போட்டியில் 107 வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்த தொடர் 6 சுற்றுகள் மற்றும் இறுதிப்போட்டியை கொண்டது.

இதில் இந்திய வீராங்கனை தமிழகத்தை சேர்ந்த வைஷாலி 3-வது சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை கரிசா யிப் உடன் மோதினார். இதில் வைஷாலி 4-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். மற்றொரு இந்திய வீராங்கனையான ஹரிகா துரோனவள்ளி, கிரீசின் ஸ்டாவ்ரூலா சோலகிடோவை 4-2 என்ற கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

# இங்கிலாந்து மன்னருடன் சந்திப்பு

இந்தியா- இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி கடந்த 10-ந்தேதி லண்டன் லார்ட்சில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் இரு அணிகளும் ஒரே மாதிரி 387 ரன்கள் எடுத்தன. 2-வது இன்னிங்சில் இங்கிலாந்து 192 ரன்னில் அடங்கியது. இதனால் இந்தியாவுக்கு 193 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பின்னர் இலக்கை நோக்கி 2-வது இன்னிங்சை விளையாடிய இந்தியா 170 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. இதனால் இங்கிலாந்து 22 ரன்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றியை ருசித்தது. ஜடேஜா 61 ரன்களுடன் (181 பந்து, 4 பவுண்டரி, ஒரு சிக்சர்) கடைசி வரை களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர், பென் ஸ்டோக்ஸ் தலா 3 விக்கெட்டுகளை சாய்த்தனர்.இந்த நிலையில், இந்திய அணி வீரர்கள் , வீராங்கனைகள் இங்கிலாந்து மன்னர் சார்லஸை கிளாரன்ஸ் மாளிகையில் நேற்று சந்தித்தனர் இது தொடர்பான புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஜடேஜாவுக்கு குவியும் வாழ்த்துகள்

இங்கிலாந்து 3-ஆவது டெஸ்ட்டில் த்ரில் வெற்றி பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணிக்கு 193 ரன்கள் தேவையான நிலையில் அதை சேஸ் செய்ய முடியாவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. ஜடேஜா தனியாளாகப் போராடி 181 பந்துகளில் 61 ரன்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மற்ற வீரர்கள் ஆட்டமிழந்ததால் இந்திய அணி தோல்வியைத் தழுவியது. இந்த ஒரு போட்டி மட்டுமல்ல, இது மாதிரி பல போட்டிகளில் ஜடேஜா தனியாக நின்று விளையாடியுள்ளார். இந்திய ரசிகர்கள் சமூக வலைதளங்களில் ஜடேஜாவைப் போர்வீரன் எனப் பாராட்டி வருகிறார்கள். சி.எஸ்.கே. அணி தனது சமூக வலைதளப் பக்கத்தில் தளபதி ஜடேஜா எனக் கூறுவதற்கான காரணம் என அவர் அடித்த ரன்களை பட்டியலிட்டுள்ளது.

# சேஸிங்கில் சொதப்பும் இந்தியா

இந்தியா - இங்கிலாந்துக்கு எதிரான 3-வது டெஸ்ட்டில் இங்கிலாந்து அணி கடைசி நாளில் 12 ரன்களில் த்ரில் வெற்றி பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணிக்கு 193 ரன்கள் தேவையான நிலையில் அதை சேஸ் செய்ய முடியாவில் ஆட்டமிழந்தது. ஜடேஜா தனியாளாகப் போராடினாலும் மற்ற வீரர்கள் ஆட்டமிழந்ததால் இந்திய அணி தோல்வியைத் தழுவியது.

சச்சின் ஓய்வுக்குப் பிறகு, டாப் 8 அணிக்கு எதிராக 150-க்கும் அதிகமான ரன்களை சேஸ் செய்யாமல் இந்திய அணி 26 முறை தோல்வியும் 2 முறை வெற்றியும் 7 முறை சமனிலும் முடிந்துள்ளது. 2021-இல் பிரிஸ்பேனிலும் 2024-இல் ராஞ்சியில் மட்டுமே இந்திய அணி வென்றுள்ளது. சச்சின் டெண்டுல்கர் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். இந்தப் புள்ளி விவரங்கள் இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மயிலாடுதுறையில் முதல்வர் ரோடு ஷோ: 2 கி.மீ. நடந்து சென்று மக்களை சந்தித்தார்



**மயிலாடுதுறை, ஜூலை 16-**
தொடர்ந்து மயிலாடுதுறையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ரோடு ஷோ' நடத்தினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிட்டு அங்கிருந்து மயிலாடுதுறை மாவட்டத்திற்கு சென்றார். மயிலாடுதுறை மாவட்ட எல்லையான கொள்ளிடத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொள்ளிடம் பாலம் அருகே சோதியக்குடி புறவழிச்சாலையில் தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்பு அங்கிருந்து புறப்பட்டு திருவெண்காடு சென்று அங்கு மதியம் தங்கினார். தொடர்ந்து மாலை 5 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு செம்பதனிருப்பு சென்று அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி சிலையை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மயிலாடுதுறையில் பூம்புகார் சாலை முதல் கச்சேரி சாலையில் உள்ள தி.மு.க. அலுவலகமான அண்ணா பகுத்தறிவு மன்றம் வரை முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ரோடு ஷோ' நடத்தினார். முதல்-அமைச்சரை பார்ப்பதற்காக சாலையின் இருபுறமும் தி.மு.க. கொடிகள், தி.மு.க. கொடி நிறத்திலான பலூன்கள், முதல்வர் படங்கள் கொண்ட பதாகைகளை பிடித்தபடி பொதுமக்கள் மற்றும் கட்சியினர் நின்று இருந்தனர். வழி நெடுகிலும் முதல்-அமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முதல்வர் மு.க. ஸ்டாலின் ரோடு ஷோ மூலம் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று மக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். முதல்-அமைச்சரின் சுற்றுப்பயணத்தையொட்டி மாவட்டம் முழுவதும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.




**மாமல்லபுரத்தில் வரும் 3-ம் தேி முதல் 13-ம் தேதி வரை 4-வது ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப் தமிழ்நாடு - 2025 போட்டி நடைபெறவுள்ளதையொட்டி, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய அலைச்சறுக்கு அணி வீரர், வீராங்கனைகள் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.**



**அரியலூரில் பிரசார சுற்றுப்பயணம் மேற்கொண்ட அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு நேற்று பொதுமக்களும், அ.தி.மு.க. தொண்டர்களும், கூட்டணிக்கட்சி தொண்டர்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**

## உங்களுடன் ஸ்டாலின் திட்டம்:
# இ.பி.எஸ்.க்கு அமைச்சர் பதில்

**சென்னை, ஜூலை 16-**
உங்களுடன் ஸ்டாலின் திட்டம் குறித்த எடப்பாடி பழனிசாமி விமர்சனத்துக்கு அமைச்சர் சேகர்பாபு பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னை மண்ணடி சாம்பயர் தெருவில் உள்ள தில்லை விநாயகர் கோவிலுக்கு வெள்ளி பூஜை பொருட்கள் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் சேகர்பாபு கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது;- இந்து சமய அறநிலைத்துறை வரலாற்றில் அதிக அளவு குடமுழுக்கு நடந்த ஆட்சியாக இந்த ஆட்சி உள்ளது. 3300-க்கு மேற்பட்ட கோவில்களில் குடமுழுக்கு நடந்திருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் 3500 கோவிலில் குடமுழுக்கு நடத்துவதற்கான பணிகளை துறை சார்ந்த அதிகாரிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

சேலத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலை அவமதிக்கப்பட்டது சமூக விரோத செயல். ஏதாவது ஒரு வகையில் வன்முறையை விதைக்க வேண்டும் என்கின்ற வகையில் நினைக்கிறார்கள். உங்களுடன் ஸ்டாலின் திட்டம் குறித்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்ததை நாங்கள் கூட திருப்பிச் சொல்லலாம், இத்தனை நாள் அமைதியாக இருந்து விட்டு இப்போது ஏன் மக்கள் பிரச்சாரத்தை தொடங்கி இருக்கிறார். இதை மக்களை ஏமாற்றுவதற்கான சூழலாக எடுத்துக் கொள்ளலாம். ஏமாற்றுபவர்கள் தான் ஏமாற்றத்தை பற்றி பேசுவார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமியை வருகிற தேர்தலில் வாக்கு வங்கியால் ஏமாற்ற மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# வீடு தேடி வரும் சேவைக்கு முதல் நாளே மக்கள் பாராட்டு
## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்

**சென்னை, ஜூலை 16-**
உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில், சென்னையில் இன்று மட்டும் 109 முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முதல் நாளே மக்கள் இதனை வரவேற்று பாராட்டுகின்றனர் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டையில் அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை சைதாப்பேட்டை தொகுதி மக்களுக்காக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளின் சேவைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:- வீடு தேடி சேவைகளை தரும் திராவிட மாடல் அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று (நேற்று) தொடங்கி வைக்கப்பட்டது. சென்னையில் இன்று மட்டும் 109 முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முதல் நாளே மக்கள் இதனை வரவேற்று பாராட்டுகின்றனர்.

தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் 15 துறைகளை சார்ந்த 45 சேவைகளும் நகர் புறங்களில் 13 துறைகளை சேர்ந்த 43 சேவைகளும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் நடத்தப்பட்டு வருகின்றன. காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விண்ணப்பிக்க பெண்கள் அதிகமாக வருவதால் கூடுதலாக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இன்று (நேற்று) முதல் நவம்பர் இறுதி வரை சென்னை முழுவதும் 400 முகாம்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு எளிதாக சேவைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சினிமா CINI செய்திகள்

## ரசிகர்களுக்கு நன்றி சொன்ன '3 BHK' படக்குழு



சாந்தி டாக்கீஸ், தயாரிப்பாளர் அருண் விஸ்வா தயாரிப்பில் சித்தார்த் நடிப்பில் உருவாகியுள்ள '3 BHK' திரைப்படம் ஜூலை 4 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது. '8 தோட்டாக்கள்' புகழ் ஸ்ரீ கணேஷ் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். அன்றாடம் நம் வாழ்வில் நடக்கும் சம்பவங்களைக் கொண்டு மனதைத் தொடும் கதையாக இந்தப் படம் உருவாகியுள்ளது.

இந்நிலையில் இதன் நன்றி தெரிவிக்கும் விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் சித்தார்த் பேசுகையில், இப்படம் என்னுடைய நாற்பதாவது படம் வெற்றியாக அமைந்துள்ளது. எந்த நம்பிக்கையில் இந்தப் படத்தை எடுத்தோமோ அதையே பார்வையாளர்களும் உணர்ந்திருக்கிறார்கள். இந்தப் படத்தின் கதையை படித்து முடித்ததும் என் அப்பாவை கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க வேண்டும் எனத் தோன்றியது என்றார். நடிகர் சரத்குமார் பேசுகையில், "ஒரு சிறிய வீட்டிற்குள் நடப்பதை ஒளிப்பதிவில் அழகாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சண்டை, பாட்டு என கமர்ஷியல் விஷயங்களைக் கொண்டு வராமல் தான் நினைத்ததை திரையில் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர் ஸ்ரீகணேஷ். அவர் ரொம்பவே மென்மையானவர் என்றார். இயக்குநர் ஸ்ரீகணேஷ் பேசுகையில், எமோஷனால, ஃபேமிலி ஸ்டோரி எடுத்தால் நிச்சயம் குடும்பம் குடும்பமாக வந்து பார்ப்பார்கள் என்று நம்பினோம். அது இப்போது நடந்து வருகிறது. இது எங்களுடைய கதை என படம் பார்ப்பவர்கள் பலரும் சொல்வதை கேட்கும்போது நெகிழ்ச்சியாக உள்ளது என்றார்..

## மீனாட்சி ஆனந்த் தயாரிப்பில் 'டிரெண்டிங்' திரைப்படம்



ராம் ஃபிலிம் பேக்டரி சார்பில், தயாரிப்பாளர் மீனாட்சி ஆனந்த் தயாரிப்பில், சிவராஜ் இயக்கத்தில், கலையரசன் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'டிரெண்டிங்'. இப்படத்தில் பிரியாலயா, பிரேம்குமார், பெசன்ட் ரவி, வித்யா போர்கியா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜூலை 18 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பு சமீபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தயாரிப்பாளர் மீனாட்சி ஆனந்த் பேசுகையில், "டிரெண்டிங் திரைப்படம் எங்களின் சிறிய முயற்சி, இயக்குநர் சிவராஜ் இந்தக்கதையைச் சொன்ன போதே, எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அனைவரும் ஆதரவு தாருங்கள் நன்றி என்றார். நடிகர் கலையரசன் பேசுகையில், "என் கேரியரில் இப்படம் மிக முக்கியமான படமாக இருக்கும். நான் ஹீரோவாக பல படங்கள் செய்துள்ளேன் அதில் இது வெற்றிப்படங்களில் ஒன்றாக இருக்கும்.

வேறொரு படம் செய்வதாக ஆனந்துடன் பேசிக்கொண்டிருந்தோம், சிவராஜ் இந்தக்கதை சொன்ன போது எல்லோருக்கும் பிடித்தது. குறைந்த ஆர்டிஸ்ட் வைத்து 2 மணி நேரம் உட்கார வைப்பது ஈஸியான விசயமில்லை, அதை சிவராஜ் செய்துள்ளார் என்றார்.

## துருவ் சர்ஜா நடிக்கும் 'கே.டி-தி டெவில்'




துருவ் சர்ஜா நடிப்பில் இயக்குநர் பிரேம் இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் கே.டி. - தி டெவில். இப்படத்தின் டீசர் வெளியான நிலையில் படக்குழுவினர் சமீபத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய நடிகர் சஞ்சய் தத், இந்த படத்தைப் பொறுத்தவரை மிக அற்புதமான அனுபவமாக இருந்தது. இது அட்டகாசமான மாஸ் ஆக்சன் படம், துருவ் சர்ஜா நன்றாக நடித்துள்ளார், அனைவருக்கும் படம் பிடிக்குமென நம்புகிறேன் என்றார்.

இயக்குநர் பிரேம் பேசுகையில், "கேடி - தி டெவில்" 1970களில் பெங்களூர் நகரின் தெருக்களுக்குப் பார்வையாளர்களை மீண்டும் கூட்டிச் செல்லும் வகையில் இப்படம் அமைந்துள்ளது. பீரியட் டிராமாவுடன் ஆக்சன் கலவையில், முன்னணி நட்சத்திரங்களின் பங்கேற்பில், இந்த ஆண்டின் மிகவும் எதிர்பார்க்கப்படும் படங்களுள் ஒன்றாக ரசிகர்களிடம் பெரும் ஆவலைத் தூண்டியுள்ளது என்றார். கே.வி.என் புரொடக்ஷன்ஸ் வெங்கட் கே.நாராயணா வழங்கும் இப்படம் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது.

## 'உருட்டு உருட்டு' பட இசை வெளியீட்டு விழா



ஜெய் ஸ்டுடியோ கிரியேஷன்ஸ், சாய் காவியா மற்றும் சாய் கைலாஷ் வழங்க, பத்ம ராஜு ஜெய்சங்கர் தயாரிப்பில் பாஸ்கர் சதாசிவம் இயக்கத்தில், உருவாகியுள்ள படம் உருட்டு உருட்டு. நாகேஷின் பேரன் கஜேஷ் கதாநாயகனாக நடித்துள்ள இப்படத்தில் நாயகியாக ரித்விகா ஸ்ரேயா நடித்துள்ளார். விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீடு விழா சமீபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் நடிகர் ஆனந்த்பாபு பேசுகையில், உருட்டு உருட்டு படத்தை இயக்குநர் அழகாக செய்துள்ளார். இதில் என்னுடைய பையன் நாயகனாக நடித்துள்ளான். நான் நடித்த போது எனக்கு எப்படி ஆதரவு தந்தீர்களோ, அதே போல் என் பையனுக்கும் உங்கள் ஆதரவைத் தாருங்கள் நன்றி என்றார். இயக்குநர் கஸ்தூரி ராஜா பேசுகையில், ஆனந்த் பாபு தன் பையனுக்காக ஒவ்வொரு அலுவலகத்துக்கும், போனார். என்னுடைய அலுவலகத்துக்கும் வந்திருந்தார். என் பையன்களுடைய அலுவலகத்துக்கும் போயிருக்கார், அந்த தந்தையினுடைய வலிக்கு நீங்கதான் நிவாரணம் கொடுக்க வேண்டும். அதுக்காக இந்த படம் பெரிய வெற்றி பெற வேண்டும் என்றார். மேலும் இப்படத்தில் மொட்டை ராஜேந்திரன், அஸ்மிதா, ஹேமா சின்னாலம்பட்டி சுகி, பாவா லட்சுமணன், சேரன் ராஜ், மிப்பு இவர்களுடன் தயாரிப்பாளர் பத்ம ராஜு ஜெய்சங்கர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

## '.ஃப்ரீடம்' திரைவிமர்சனம்



சசிகுமார் மற்றும் அவரது நண்பர்கள் சிலர் 1991 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து படகு மூலம் தமிழகத்துக்கு வருகிறார்கள். அவர்கள் ராமேஸ்வரம் முகாமில் தங்க வைக்கப்படுகிறார்கள். அப்போது, இந்திய முன்னாள் பிரதமர் மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்யப்படுகிறார். இதனால், சமீபத்தில் இலங்கையில் இருந்து வந்தவர்களை விசாரிப்பதற்காக வேலூர் கோட்டைக்கு அழைத்து செல்லப்படுகிறார்கள். விசாரணை என்ற பெயரில் பல வருடங்களாக கொடுமைகளை அனுபவிக்கும் அந்த அப்பாவி ஈழத்தமிழர்கள், ஒரு கட்டத்தில் அங்கிருந்து தப்பிக்க முடிவு செய்ய, அவர்கள் தப்பித்தார்களா? இல்லையா? என்பதை உணர்வுப்பூர்வமாக சொல்லும் படந்தான் ஃப்ரீடம்'.

ஈழத்தமிழராக நடித்திருக்கும் சசிகுமார், வசன உச்சரிப்பு உடல் மொழியில் சிறப்பாக நடித்திருக்கிறார். சசிகுமாரின் மனைவியாக நடித்திருக்கும் லிஜிமோல் ஜோஸ் சிறப்பாக நடித்திருக்கிறார். ஜிப்ரானின் இசையும் உதயகுமாரின் ஒளிப்பதிவும் அருமை. இலங்கையில் அனுபவிக்கும் கொடுமைகளில் இருந்து தப்பிப்பதற்காக தமிழகத்திற்கு அகதிகளாக வந்த ஈழத்தமிழர்கள் பலர் இலங்கையை விட அதீத கொடுமையை இங்கு அனுபவித்த உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு இப்படத்தை இயக்கியிருக்கும் இயக்குநர் சத்யசிவா, உணர்வுப்பூர்வமான படைப்பாக மட்டும் இன்றி விறுவிறுப்பான திரைப்படமாகவும் கொடுத்திருக்கிறார்

## 'தேசிங்குராஜா 2' திரைவிமர்சனம்



காவல் ஆணையராக இருக்கும் விமல், குற்றவாளிகளுக்கு துணை போவதோடு காவல்துறைக்கே களங்கமாக இருக்கிறார். அவரது நண்பரான ரவுடி ஜனா, அமைச்சர் மகனை கொல்லப்போவதாக சவால் விடுகிறார். எனவே அமைச்சரின் மகனை பாதுகாக்கும் பொறுப்பு போலீஸ் உதவி கமிஷ்னர் பூஜிதாவிடம் ஒப்படைக்கப்படுகிறது. ஆனால் ஜனா அவரை கொலை செய்கிறார். அமைச்சர் மகனை ஜனா கொலை செய்ய காரணம் என்ன?, பாதுகாப்பு அளிக்கும் விமலுக்கு இதில் தொடர்பு இருக்கிறதா? என்பது தான் படத்தின் மீதிக் கதை.

படத்தில் விமல் வழக்கமான தனது நடிப்பைக் கொடுத்திருக்கிறார். மற்றொரு நாயகனாக நடித்திருக்கும் ஜனா, நடனம், ஆக்ஷன் என அனைத்தும் தனக்கு தெரியும் என்பதை நிரூபித்திருக்கிறார். பூஜிதா பொன்னடா, ஹர்ஷிதா பண்ட்லமூரி, ஜூகி என மூன்று பேர் நாயகிகளாக சுமாராக நடித்திருக்கிறார்கள். எழுதி இயக்கியிருக்கும் எழில், நகைச்சுவை படம் என்ற பெயரில் ஒரு தரமற்ற படத்தை கொடுத்திருக்கிறார். படம் முழுவதும் யார் யாரோ, எதை எதையோ பேசிக் கொண்டிருக்க, திடீரென்று ஒரு திருப்பம், என்று கதை எப்படியோ பயணித்து முடிகிறது.

## நத்தம் அருகே கார் மோதி சாலையை கடக்க முயன்ற முதியவர் படுகாயம்

**நத்தம், ஜூலை 16-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்- தர்பார்நகரை சேர்ந்தவர் கமர்தீன்(69). இவர் மதுரை சாலையில் உள்ள விளாம்பட்டி பகுதியில் பழக்கடை நடத்தி வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் இவர் விளாம்பட்டி பஸ் ஸ்டாப்பகுதியில் இருந்து கடைக்கு செல்வதற்காக சாலையை கடக்க முயன்றார்.அப்போது மதுரை தெற்குவாசலை சேர்ந்த அசன்உசேன்(40) என்பவர் ஒட்டி வந்த கார் முதியவர் மீது மோதியது. இதில் தூக்கிவீசப்பட்ட முதியவருக்கு கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது.ஆபத்தான நிலையில் அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.மேலும் காரில் வந்த ரபிஜான்(29), மெகர்நிஷா(50), முகமது ஆசிக் ஆகியோருக்கு லேசான காயம் ஏற்பட்டு நத்தம் அரசு மருத்துவனையில் சிகிச்சை பெற்று சென்றனர். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### ஒட்டன்சத்திரம் நகராட்சியில்

## உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை அமைச்சர் சக்கரபாணி துவக்கி வைத்தார்



**ஒட்டன்சத்திரம், ஜூலை 16-**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் முதல் கட்டமாக நேற்றுதுவங்கப்பட்டுள்ளது. இந்த முகாம் அடுத்த மாதம் 24.08.25 வரை நடைபெற உள்ளது. இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 360 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உட்பட்ட 4, 5,8 வார்டு களுக்கான முகாம் ஒட்டன்சத்திரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த முகாமிற்கு திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி தலைமை வகித்தார். உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அமைச்சர் அர. சக்கரபாணி முகாமை தொடங்கி வைத்து பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வேண்டி விண்ணப்பித்தநபர்களுக்கு உடனடியாக சான்றிதழ்களை வழங்கினார். மேலும் முகாமை மாவட்ட ஆட்சியர் நேரில் சரவணன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த முகாமில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் தொகை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை உட்பட 13 அரசு துறைகள் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முகாமில் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி, நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி, நகர் மன்ற துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், பிரபு பாண்டியன், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் பிரபாவதி, ஒன்றியச் செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு,தலைமைச் செயற்குழு உறுப்பினர் கண்ணன், நகராட்சி ஆணையாளர் ஸ்வேதா,பொறியாளர் சுப்ரமணியபிரபு, கணக்காளர் சரவணன்,சுகாதார ஆய்வாளர் ராஜமோகன், நகரமைப்பு அலுவலர் தன்ராஜ்,மேலாளர் ரவி, உதவியாளர் அருள்முருகன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தங்கவேல், துணை வட்டாட்சியர்கள் முருகேசன், கனகராஜ், கிராம நிர்வாக அலுவலர் சிவராஜ்,கிராம உதவியாளர்கள் விஜயபாஸ்கரன் பைசல் முகமது உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். படம்.திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி விண்ணப்பித்த மனுதாரர்களுக்கு உடனடியாக சான்றிதழ்களை வழங்கினார்.



**பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை டியூக் லயன்ஸ் சங்கம் சார்பில் அவனியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கவிதை, கட்டுரை, பேச்சு மற்றும் பொது அறிவு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இதில் அ.தி.மு.க. மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் கலந்து கொண்டு பெருந்தலைவர் காமராஜர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். விழாவில் அ.தி.மு.க. இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர்.கே.ரமேஷ் பள்ளி தலைமை ஆசிரியர் சத்யபாமா, உதவி தலைமை ஆசிரியர் சாரா மற்றும் மதுரை டியூக் லயன்ஸ் சங்க நிர்வாகிகள் இளங்கோவன், சிவராமன், கார்த்திகேயன் பாலவைஷ்ணவி ஆகியோர் கலந்து கொண்டனர்.**

### பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாள் விழா:

## மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் கல்லணை தலைமையில் த.வெ.க. நிர்வாகிகள் ஏராளமானோர் பேரணியாக சென்று மாலை



**மதுரை, ஜூலை 16-**

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் கல்லணை தலைமையில் த.வெ.க.நிர்வாகிகள் ஏராளமானோர் பேரணியாக சென்று மாலை அணிவித்து மரியாதை செய்தனர். கல்விதந்தை,பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாள் விழா நேற்று தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. தமிழக வெற்றிக்கழக நிறுவனர் நடிகர் விஜயின் ஆணைக்கிணங்க தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் காமராஜரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதன்படி மதுரை விளக்குத்தூணில் உள்ள பெருந்தலைவர் காமராஜரின் உருவ சிலைக்கு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் கல்லணை தலைமையில் த.வெ.க.நிர்வாகிகள் ஏராளமானோர் பேரணியாக சென்று மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதில் 200- க்கும் மேற்பட்ட தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



ஐயா இளையபெருமாளின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் லால்புரத்தில் ரூ.5 கோடியே 70 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள எல்.இளையபெருமாளின் திருவுருவச்சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். இவ்விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், பாராளுமன்ற உறுப்பினர்கள் திருமாவளவன், து.ரவிக்குமார், எம்.கே.விஷ்ணுபிரசாத் உள்ளனர்.

### 12 ஆயிரம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்:

# குறிஞ்சிப்பாடி அருகே காலணி தொழிற்பூங்கா

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

கடலூர், ஜூலை 15-

'குறிஞ்சிப்பாடி அருகில் கொடுக்கன்பாளையத்தில் தோல் அல்லாத காலணி மற்றும் காலணிகளுக்கான உதிரி பாகங்கள் உற்பத்திக்கான பெரும் தொழில் பூங்கா அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 12,000 பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்திலுள்ள லால்புரத்தில் எல்.இளையபெருமாளின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார். இந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பில், ''கடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி பகுதிகளில் வாழும் மகளிருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் வகையில், குறிஞ்சிப்பாடி அருகில் இருக்கும் கொடுக்கன்பாளையத்தில் 150 ஏக்கர் பரப்பளவில், தோல் அல்லாத காலணி மற்றும் காலணிகளுக்கான உதிரிபாகங்கள் உற்பத்திக்கான பெரும் தொழில் பூங்கா அமைக்கப்படும். சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில், 75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள இந்த தொழில் பூங்காவில், சுமார் 12 ஆயிரம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்'' எனத் தெரித்தார்



மயிலாடுதுறை கொள்ளிடம் புறவழிச்சாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலையை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ.மெய்யநாதன், சி.வி.கணேசன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம்.முருகன், பன்னீர்செல்வம், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந.கௌதமன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் ஆகியோர் உடனிருந்தனர்.




கடலூர் மாவட்டம் சிதம்பரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜரின் 123-வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன், பாராளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், து.ரவிக்குமார், எம்.கே.விஷ்ணுபிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், தி.வேல்முருகன், சபா.ராஜேந்திரன், கோ.அய்யப்பன் கலந்துகொண்டனர்.



முதலமைச்சரின் சிறப்புத்திட்டமான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகாவீர் ஜெயின் பவன் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்ற முகாமில் ஒரு மாணவிக்கு ஆதார் அட்டை வழங்கும் பணிக்காக கருவிழி ஸ்கேன் செய்யப்படுவதை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார். இதில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜோசப் சாமுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பெருந்தலைவர் காமராஜரின் 123-வது பிறந்த நாளை முன்னிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி அரியலூர் மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

### உழவன் செயலி, பயிர் கடன் தள்ளுபடி:

# பட்டியலிட்டார் எடப்பாடி பழனிசாமி

அரியலூர், ஜூலை 16-

விவசாயிகளுடனான சந்திப்பின் போது உழவன் செயலி, பயிர் கடன் தள்ளுபடி குறித்து இ.பி.எஸ். பட்டியலிட்டு பேசினார்.

அரியலூரில் விவசாயிகளுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கலந்துரையாடினார். இதன் அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளுக்கு செய்த நலத்திட்டங்களை பட்டியலிட்டு எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:- அ.தி.மு.க. ஆட்சியில் 2 முறை பயிர் கடன்களை தள்ளுபடி செய்தோம். 11 ஆயிரத்து 11 கோடி ரூபாய் அளவுக்கு விவசாய கடன்களை தள்ளுபடி செய்தோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் முந்திரி சாகுபடிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்தோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் உழவன் செயலியை அறிமுகம் செய்து, பருத்தி நோய் தாக்குதலின் போது மருந்து அடிக்க பரிந்துரைத்தோம். மரவள்ளி கிழங்கு நோய் தாக்குதலுக்கு, மாவு பூச்சி பயிர்களுக்கு தேவையான மருந்து அடித்து பாதுகாத்தோம்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் ஏரிகளை தூர்வாரிய போது வண்டல் மண்ணை எடுத்து விவசாயிகள் பயன் பெற்றாக கூறினார்.

# எங்களை ஒழிக்க நினைத்தால் சட்டசபைக்கு கூட வர முடியாது

## அமைச்சர் துரைமுருகன் ஆவேசம்

வேலூர், ஜூலை 16-

'எங்களை ஒழிக்க நினைத்தால் சட்டசபைக்கு கூட வர முடியாது' என விஜய் குறித்து நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் துரைமுருகன் பதில் அளித்தார்.

வேலூர் மாவட்டம், காட்பாடியில் அமைச்சர் துரைமுருகன் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் நிருபர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார். அதன் விபரம் பின்வருமாறு:

கேள்வி: சேலத்தில் கருணாநிதி சிலை மீது கருப்பு மை பூசப்பட்டுள்ளது?

துரைமுருகன் பதில்: யாரோ ஒரு காலி பையன் ஊத்தி இருக்கான் கருப்பு மையை ஊற்றி இருக்கான்.

கேள்வி: புத்தக வெளியீட்டு விழாவில் பேசும் போது, சீனியர்கள் தான் தூண்கள். அவர்கள்தான் சிகரம் என கடந்த முறை பேசியது தொடர்பாக விளக்கம் அளித்துள்ளார். இதை எப்படி பார்க்கிறீர்கள்?

துரைமுருகன் பதில்: நான் பார்த்தேன். அவருக்கு (ரஜினி) நான் போன் பண்ணி பேசினேன். ரொம்ப தேங்க்ஸ் சார் இப்பவாவது மறக்காமல் பேசி இருக்கிறீர்கள் என்று கூறினேன்.

கேள்வி: நீங்கள் செய்த தவறை நீங்களே சரி செய்து விடுங்கள் என த.வெ.க., தலைவர் விஜய் பேசியுள்ளாரே?

துரைமுருகன் பதில்: ஏன் கேள்வி கேட்பதற்கு கூட அவர் வரமாட்டாரா? எங்களை ஒழிக்க நினைத்தால் சட்டசபைக்கு கூட வர முடியாது.

### அரசு மரியாதையுடன் சொந்த ஊரில்

# நடிகை சரோஜாதேவி உடல் நல்லடக்கம்

பெங்களூரு, ஜூலை 16-

மறைந்த பழம்பெரும் நடிகை சரோஜா தேவி உடல் அவரது சொந்த ஊரில் துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் பிறந்த சரோஜா தேவி 16 வயதில் சினிமாவில் நடிக்க தொடங்கினார். கன்னடத்தில் ஹொன்னப்ப பாகவதரின், மஹாகவி காளிதாஸ் என்ற படத்தில் அறிமுகமானார். அதன்பின் தமிழ் திரையுலகுக்கு வந்த இவர், எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், ரவிச்சந்திரன் உட்பட பல நட்சத்திர நடிகர்களுக்கு ஜோடியாக நடித்தார். தெலுங்கு, ஹிந்தியிலும் நடித்துள்ள இவர் ஏறக்குறைய 200 படங்கள் நடித்துள்ளார்.



பழம்பெரும் நடிகை சரோஜாதேவியின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய கர்நாடக முதல்வர் சித்தராமையா.

பெங்களூரின் மல்லேஸ்வரத்தில் குடும்பத்தினருடன் வசித்து வந்த அவர், வயது முதிர்வு காரணமாக உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் காலை 8:30 மணியளவில் காலமானார். அரசியல் தலைவர்கள், திரையுலக பிரமுகர்கள் என, பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். கர்நாடகா முதல்வர் சித்தராமையா நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். நேற்று காலை 11:30 மணி வரை, அவரது உடல் பொது மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

பின்னர் சரோஜா தேவியின் சொந்த ஊரான ராம்நகர், சென்னப்பட்டணாவின், தஷாவரா கிராமத்திற்கு அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் அவரது உடல் எடுத்து செல்லப்பட்டது. வழிநெடுக ரசிகர்கள் பலர் அவருக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். பின்னர் தஷாவரா கிராமத்தில் துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு சார்பில் மரியாதை செய்யப்பட்டது. பின்னர் ஒக்கலிகர் சம்பிரதாயப்படி சரோஜாதேவியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச்சடங்கில் கர்நாடக துணை முதல்வர் சிவக்குமார் கலந்து கொண்டார். மேலும் திரையுலகை சேர்ந்த ராக்லைன் வெங்கடேஷ், ஜெயமாலா உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

கண்கள் தானம் சரோஜா தேவி திரைமறைவில் பல பொது சேவைகள் செய்தவர். தன் கண்களை தானம் செய்துள்ளார். நேற்று முன்தினம் மருத்துவ குழுவினர் அவரது கண்களை தானமாக பெற்றனர்.



பெருந்தலைவர் காமராஜரின் 123-ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் விளக்குதூணில் உள்ள அவரது உருவச்சிலைக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பரவை ராஜா, கு.திரவியம், எம்.எஸ்.கே.மல்லன், சண்முகவள்ளி, வி.பி.ஆர்.செல்வகுமார், எஸ்.டி.ஜெயபாலன், சக்திவிநாயகர்பாண்டியன், கே.கலைச்செல்வம், ஜோசப்தனிஸ்லாஸ், வி.கணேசன், கே.வி.கே.கண்ணன், ஒட்டுரணி திருமுருகன், மார்க்கெட் மார்நாடு, மார்க்கெட் செந்தில்குமார், பஜார் துரைப்பாண்டி, கிராஸ்ரோடு ராதா, கோவில் நெடுஞ்செழியன், புதூர் நாகராஜ், ராணிநல்லுச்சாமி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.